## தலைவர்/பிரதம நிறைவேற்றுநரின் செய்தி

# Visionary



ஹேலீஸ் உலகின் பாரிய பலமாக அதன் பன்முகத்தன்மை, ஆளுகைக் கட்டமைப்பு மற்றும் இணைதிறன்களை இயக்கும் ஆற்றல் காணப்படுகின்றது. பன்முகத்தன்மையானது பல கூறுகளைக் கொண்டுள்ளதுடன் கைத்தொழில்கள் மற்றும் தேசங்களுக்கு இடையேயான தெளிவான பன்முகத்தன்மைக்கு அப்பால் அதன் மக்களுக்கு செல்கின்றது.

மொஹான் பண்டித்தகே
தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி

## அன்புள்ள பங்குதாரருக்கு,

குழுமத்தின் 144 வருட வரலாற்றில் உயர்ந்த இலாபத்திற்கான ஒரு புதிய சாதனையினை உருவாக்கி, நாம் முன்னைய வருடத்தில் பதிவுசெய்த சாதனையினை தாண்டி 100% அதிகரிப்புடன் ஹேலீஸ் பிஎல்சி வரிக்கு பிந்திய இலாபமாக ரூபாய் 28.10 பில்லியனை பதிவுசெய்ததனை அறிக்கையிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். ஹேலீஸ் உலகின் அங்கத்தவர்கள், முன்கூட்டியே எச்சரிக்கை சமிக்ஞைகளை இனங்காணும் குழுமவாரியான முன்னெடுப்புகள் ஊடாக இணைதிறன்களை பெருமமாக்குதல் மற்றும் ஆண்டானது முன்னேறும்போது உத்வேகத்தினை அடைந்த குவிவான சவால்களை வெற்றி கொள்வதற்காக ஒன்றிணைந்தார்கள்.

இலங்கையானது சுதந்திரத்திற்கு பின்னரான அதன் மிகவும் மோசமான சமூகபொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுப்பதுடன் இதனை எழுதும்போது மீண்டெழுவதற்கான பாதையானது வரையப்பட்டுக் கொண்டுள்ளது. நாட்டின் அந்நிய செலாவணி ஒதுக்கங்கள் வீழ்ச்சியடைந்தன, நாணயமானது 75% ஆல் பெறுமதியிறக்கம் செய்யப்பட்டது மற்றும் ஏப்ரல் 2022 இல் பணவீக்கமானது 30% எட்டுவதற்கு திடமாக உயர்வடைந்தது. ஒரு சரிப்படுத்துகின்ற நடவடிக்கையாக கொள்கை வட்டி வீதங்கள் 700 அடிப்படை புள்ளிகளினால் உயர்த்தப்பட்டன மற்றும் நாடானது அதன் கடன் மீள்செலுத்துகையில் சிரமப்பட்டதுடன் பொருளாதாரத்தினை ஒரு சாய்விலா மிதப்பு மட்டத்திற்கு கொண்டுவருவதற்கு அவசியமான சீர்திருத்தம் மற்றும் திருத்தத்தின் அளவினை குறிகாட்டியது. அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் பணவீக்கத்தின் விளைவாக மக்கள் முகங்கொடுக்கும் பொருளாதார இன்னலானது உடனடியாக விழித்துரைக்கப்படவேண்டிய ஒரு முக்கிய காரணியாகும். அதேசமயம், நாம் ஒரு தெளிவான முன்னோக்கிய பாதையினை அடையும்வரை மிகவும் அவசியமான அந்நிய செலாவணியினை உழைப்பதற்கும் தொழில்கள் மற்றும் வாழ்வாதாரங்களை பாதுகாப்பதற்காகவும் நாம் பொருளாதாரத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது முக்கியமானதாகும்.

### பன்முகத்தன்மை, ஆளுகை மற்றும் இணைதிறன்

ஹேலீஸ் உலகின் பாரிய பலமாக அதன் பன்முகத்தன்மை, ஆளுகைக் கட்டமைப்பு மற்றும் இணைதிறன்களை இயக்கும் அதன் ஆற்றல் காணப்படுகின்றது. பன்முகத்தன்மையானது பல கூறுகளைக் கொண்டுள்ளதுடன் கைத்தொழில்கள் மற்றும் தேசங்களுக்கு இடையேயான தெளிவான பன்முகத்தன்மைக்கு அப்பால் அதன் மக்களுக்கு செல்கின்றது. எமது உலகானது ஒரு செழிப்பான சூழலமைப்பினைக் கொண்டுள்ளதுடன் இங்கு செய்பவர்கள், விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் நடைமுறைக்கேற்ற தொலைநோக்குடையவர்கள் அனைவரும் பொது இலக்குகள் மற்றும் விழுமியங்களினால் ஒன்று சேர்ந்து எமது மூலோபாய இலக்குகளை அடைவதற்கு கூட்டாக பணியாற்றுகின்றார்கள். குழுமத்தின் ஆளுகைப் பொறிமுறையானது வரையறுக்கப்பட்ட எல்லைகளினுள் கூட்டாண்மை இலக்குகள் நோக்கிய ஒத்திசைவு மற்றும் ஒருங்கிணைந்த அசைவுகளுக்கு வசதியளிக்கின்றது. செயற்திறனை அங்கீகரித்து வெகுமதியளிக்கும் தத்துவமானது தகுதியாண்மைக்கான ஓர் கலாச்சாரத்திற்கு ஊட்டமளித்துள்ளதுடன் இங்கு எவ்வித பாகுபாடுமின்றி அனைவருக்கும் பிரகாசிப்பதற்கும் மற்றும் மேலெழுவதற்குமான ஆற்றல் காணப்படுகின்றது.

# தலைவர்/பிரதம நிறைவேற்றுநரின் செய்தி

## சிறப்பம்சங்கள் 2021/**22**

அந்நிய செலாவணி உழைப்புகள்
**US$. 615.98** மில்லியன்

வெளிநாட்டு துணைக்கம்பனிகளிடமிருந்து பெறப்பட்ட பங்கிலாபங்கள்
**US$. 6.24** மில்லியன்

### விதிவிலக்கான செயற்திறன்

| | |
|---|---|
| வருவாய் US$. 1.60 பில். | ▲ 25% |
| EBITDA US$. 199.29 மில். | ▲ 27% |
| EBIT US$. 159.35 மில். | ▲ 29% |
| PBT US$. 169.42 மில். | ▲ 86% |
| PAT US$. 133.29 மில். | ▲ 100% |

### திடமான அடித்தளங்கள்

மொத்த சொத்துக்கள் US$. 1.37 பில்.

ஆபொஉ US$. 378.36 மில்.

நிலைச் செலவினம் US$. 66.58 மில்.

நடைமுறை சொத்துக்கள் US$. 828.17 மில்.

உரித்துவம் US$. 358.27 மில்.

கடன் US$. 585.06 மில்.

குழுமத்தின் இணைதிறன்களை திறக்கும் திறவுகோலாக ஆளுகை காணப்படுவதுடன் இது இடர்நேர்கை முகாமைத்துவத்திற்கும் மற்றும் மூலோபாயத்திலான விநியோகத்திற்கும் முக்கியமானதாகும். துறை மட்டத்திலான நிறைவேற்றுநர் குழுக்களிலிருந்து குழும முகாமைத்துவக் குழுக்கள் (GMC), சபைக் குழுக்கள் மற்றும் சபை போன்றவை வரையான பன்முக அடுக்கு மீளாய்வானது ஓர் உயர்ந்த மட்டத்திலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்பு காணப்படுவதை உறுதிசெய்கின்றது. GMC இனுள் காணப்படும் கூட்டுத் திறன்கள், அறிவு மற்றும் நுண்ணறிவுகள் எமக்கு முன்கூட்டியே எச்சரிக்கை சமிக்ஞைகளை இனங்காண்பதனையும் அதற்கமைய எமது மூலோபாயங்களை சமாளிப்பதனையும் இடர்நேர்கை பதில்வினைகளையும் இயலுமையாக்குகின்றது. GMC ஒவ்வொரு கிழமையும் கூடுவதுடன் மேலதிகமாக நிலைத்தன்மையற்ற மற்றும் உறுதியின்மையான ஒரு வருடத்தில் நேரகாலத்துடனான பதில்களை இயலுமையாக்குவதற்கான தேவை காணப்படும்போது குறுகியகால அறிவிப்பிலும் கூடுகின்றது. வருடம் பூராகவும் வளங்கள் அவசியமானபோது மீள் ஒதுக்கீட்டுடன் மூலோபாயங்கள் நெகிழ்வுடன் காணப்பட்டன.

குழுமத்தின் சரக்கனுப்பல் முகாமைத்துவ செயலணியானது கடந்த வருடத்தில் உருவாக்கப்பட்டதுடன் எமது உற்பத்திகளை நேரகாலத்திற்கு கப்பலில் ஏற்றுவதனை இயலுமையாக்கும் ஒரு முக்கிய செயற்பாடாக இது நிரூபணமாகியுள்ளது. அதேபோன்று குழும மனிதவள தலைமை, அவென்சூராவின் துறைத் தலைமை மற்றும் அனைத்து துறைகளினதும் மனிதவள தலைமைகளை உள்ளடக்கிய கோவிட் செயலணியானது எமது வணிக அமைவிடங்களில் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதிலும் கோவிட் உறுதிசெய்யப்பட்டவர்களது கவனிப்பிற்கான ஏற்பாடுகளை செய்வதிலும் ஒரு முக்கிய பங்கினை வகித்தது. கோவிட் செயலணியானது எமது பணியாட்களுக்கு தடுப்பூசி போடுதலை ஒருங்கிணைத்ததுடன் இரண்டாம் மருந்தளவில் ஒரு ஒட்டுமொத்த 99% தடுப்பூசி வீதத்தினை பதிவுசெய்தது. மூலோபாய திட்டமிடல், நிதி மற்றும் திறைசேரி போன்ற ஏனைய மத்திய செயற்பாடுகள் ஒரு குழுமமாக இணைதிறன்களை திறந்து, வளங்களை முகாமைப்படுத்துவதற்கு தொடர்ந்தும் வசதியளிக்கின்றது.

2019 இல் இடம்பெற்ற ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களிலிருந்து நாம் அடைந்தவற்றை பார்க்கும்போது தலைமைத்துவ அணிகளது அறிவு மற்றும் அனுபவம் என்பன அதிவேகமாக வளர்ச்சியடைந்து ஒரு புதிய மட்டத்தினை எட்டியுள்ளது தெளிவாகின்றது. ஒரு முழுமையான செயற்திறனை தொடர்ந்து விநியோகிக்கும் தேர்ச்சி பெற்ற மற்றும் சோதனை செய்யப்பட்ட அணியானது குழுமத்தின் வெற்றிக்கு ஒரு முக்கிய இயக்கி என்பதுடன் இது குழுமத்தினை ஒரு புதிய வளர்ச்சி யுகத்திற்கு எடுத்துச்செல்லும்.

### சூழல், சமூக மற்றும் ஆளுகைக்கான எமது கடப்பாட்டினை புதுப்பித்தல்

நீடிப்புத்திறனின் முன்பான தலைவராக ஹேலீஸ் பிஎல்சி பாதகமான தாக்கங்களை குறைக்கும் நோக்குடன் சமூகம் மற்றும் சூழலிலான அதன் தாக்கத்தினை புரிந்துகொள்வதற்கான அமைப்புமுறைகளை நிறுவியுள்ளது. குழுமத்தின் சூழல், சமூக மற்றும் மற்றும் ஆளுகை (ESG) நிகழ்ச்சி நிரலினை தரமுயர்த்தி குழுமத்தின் இலக்குகளுடன் ஒவ்வொரு துறையும் வரிசைப்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்கான நேரம் இதுவாகும். நாம் எமது ESG கொள்கைகள் மற்றும் கடப்பாடுகளை ஒரு ஆவணத்தில் அடக்கியுள்ளோம் - ஹேலீஸ் வாழ்க்கை விதித்தொகுப்பு. இது 2030 அளவில் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தினை 30% ஆல் குறைப்பதற்கும், பல்லுயிர் பெருக்கத்தினை ஐந்து மடங்காக அதிகரிப்பதற்கும், 2030 அளவில் பூச்சிய நிலநிரப்பல் கழிவினை அடைவதற்கும் மற்றும் ஏனைய சூழல், சமூக, ஆளுகை இலக்குகளை அடைவதற்கான கடப்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளது. இதற்கும் மேலாக, ஊழல் தடுப்பு, இலஞ்சத் தடுப்புகளிலான குழுமத்தின் கொள்கைகளை அது வலுப்படுத்தி, இந்த முக்கிய விடயங்களில் குழுமத்தின் பூச்சிய சகிப்புத்தன்மை நிலைப்பாட்டினை தெளிவாக விளக்குகின்றது. இந்த இலக்குகள் துறை மட்டங்களில் விரிவான செயற்பாடுகள் மற்றும் கடப்பாடுகளுடன் உறுதுணையளிக்கப்படுவதுடன் குழுமத்தினால் பொறுப்பேற்கப்பட்ட ESG கடப்பாடுகளது மிகவும் விரிவான பயிற்சியாக செய்துள்ளது.

நீடிப்புத்திறன் கட்டாயத்திலான உலகளாவிய அறிக்கையிடல் முன்னெடுப்பு (GRI) தென்னாசிய சாசனத்தில் ஹேலீஸ் பிஎல்சி ஓர் அங்கத்தவராக உத்தியோகபூர்வமாக கையொப்பமிட்டது. இது அடுத்த தசாப்தத்தினுள் ஐக்கிய நாடுகள் நீடிப்புத்திறன் அபிவிருத்தி இலக்குகளை (SGDs) அடைவதில் துணைபுரிவதற்கான வணிகங்கள் மற்றும் பங்காளிகளது தீர்மான செயற்பாட்டிற்கான ஒரு தெளிவான அழைப்பாகும். ஹேலீஸ் பிஎல்சி மற்றும் ஹேலீஸ் ப்ளான்டேசனின் ஒரு துணைக்கம்பனியான தலவாக்கலை டீ எஸ்டேட்ஸ் பிஎல்சி ஆகியன GRI தென்னாசிய சாசனத்தின் முதலாம் மூன்று பிராந்திய அங்கத்தவர்களில் இரண்டாம் நிலையாகும் என்பதோடு இலங்கையினை பிரதிநிதித்துவம் செய்யும் ஒரே கூட்டாண்மை நிறுவனங்களுமாகும். இந்த முயற்சியானது சாசனத்தின் கொள்கைகளை கடைப்பிடித்தல் மற்றும் அமுல்படுத்தலுக்கான ஓர் உண்மையான, நீண்டகால கடப்பாடாகும். இது ESG வரம்புறுகைகளிடையே குழுமத்தின் நீடிப்புத்திறன் முன்னெடுப்புகளது தாக்கத்தினை உறுதிப்படுத்துவதற்கு புதிய அமைப்புமுறைகளை முன்னியக்கமாக நிறுவுவதற்காகும். இது குழுமத்தின் நீடிப்புத்திறன் நடைமுறைகள் மற்றும் சாசனத்தின் கொள்கைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு மற்றும் ESG அறிக்கையிடுவதில் மேன்மைக்கான ஒரு நீண்ட கடப்பாட்டினதும் முழுமையான மீளாய்வினை பின்பற்றுகின்றது.



## 2021 எண்களில்

உலக பொருளாதார வளர்ச்சி **- 6%**

| | வருவாய் பங்களிப்பு | பொருளாதார வளர்ச்சி |
|---|---|---|
| இலங்கை | 81.6% | 3.7% |
| இத்தாலி | 4.2% | 6.5% |
| தாய்லாந்து | 4.1% | 1.6% |
| மாலைதீவு | 1.8% | 18.9% |
| மியன்மார் | 0.4% | -12.0% |
| பங்களாதேஷ் | 1.2% | 4.5% |
| அவுஸ்திரேலியா | 0.7% | 3.8% |
| இந்தியா | 0.5% | 8.9% |
| இந்தோனேஷியா | 1.3% | 3.7% |
| சிங்கப்பூர் | 0.8% | 7.6% |
| ஐக்கிய இராச்சியம் | 1.2% | 7.5% |
| அமெரிக்கா | 2.1% | 5.7% |
| ஜப்பான் | 0.2% | 1.8% |

உலக வர்த்தக பாய்ச்சல்கள்
**25%**

இலங்கை
இறக்குமதி **28.5%**
ஏற்றுமதி **24.4%**

இலங்கை

| | ஏப்ரல் 2022 | டிசம்பர் 2021 | டிசம்பர் 2020 |
|---|---|---|---|
| மொ.உ.உ. (US$ மில்.) | - | 84.5 | 80.7 |
| தலா வருமானம் (US$) | - | 3,815 | 3,695 |
| வேலையின்மை (%) | - | 5.1% | 5.50% |
| துறைவாரியான மொஉஉ வளர்ச்சி | | | |
| விவசாயம் | - | 2.0% | -2.2% |
| கைத்தொழில் | - | 5.3% | -6.9% |
| சேவைகள் | - | 3.0% | -1.6% |
| AWPLR (%) | **16.4%** | 8.6% | 5.8% |
| பரிமாற்ற வீதம் (ரூ:1US$) | **347.06** | 199.88 | 185.52 |
| பணவீக்கம் | **29.8%** | 12.1% | 6.2% |
| உணவு பணவீக்கம் | **46.6%** | 22.1% | 9.2% |
| உணவல்லாத பணவீக்கம் | **22.0%** | 7.5% | 2.0% |

### முறிவுப் பாதைகளை அகலமாக்குதல் மற்றும் ஓர் தகர்ப்பான மீட்டல்

கட்டமைப்பு சார் சிக்கல்களின் காரணமாக பாதிக்கப்படக்கூடிய பொருளாதாரங்கள் வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களிலிருந்து விலகிச்செல்லக்கூடிய வழிக்கான சமிக்ஞைகள் காணப்பட்டபோதிலும், நாம் வருடத்தினை ஆரம்பிக்கும்போது உலகளாவிய பொருளாதாரமானது 6% ஆக வளர்ச்சியடையும் என எதிர்வுகூறப்பட்டது. பின்னடைவுகளை கட்டுப்படுத்தி மீட்டலை இயக்குவதற்கான முக்கிய விடயமாக கொள்கை மறுசீரமைப்புகள் காணப்படுகின்றன. இந்த பின்னணிக்கு எதிராக, ஏப்ரல் 2021 இல் இலங்கை இரசாயன உரம் மற்றும் ஏனைய வேளாண்மை வேதிப்பொருட்களின் இறக்குமதி தடையினை அறிமுகப்படுத்தியதுடன், இது நாட்டின் விவசாயத்துறையில் பேரழிவான தாக்கத்தினை உருவாக்கியது. விவசாயத்துறை பூராவுமான அற்பமான விளைச்சல் உணவுப் பணவீக்கத்தினை மேலுயர்த்தி நாட்டின் உணவுப் பாதுகாப்பினை அச்சுறுத்தியது. இந்த இடைவெளியானது இவ்வருடத்தில் அடிப்படை உணவுப் பொருட்களின் இறக்குமதியுடன் ஈடுகட்டப்பட்டதுடன் அவசியமான உணவுப் பொருட்களின் இறக்குமதிக்கான தேவையினை உருவாக்கியது. இரசாயன உர இறக்குமதிக்கான தடையானது செப்டம்பர் 2021 இல் அகற்றப்பட்டதுடன், இந்த சமயத்தில் உலகளாவிய சந்தையில் உரம் மற்றும் வேளாண்மை வேதிப்பொருட்களின் விலைகள் கணிசமானளவு உயர்வடைந்தன. இது நெல் உற்பத்திக்கான முக்கிய பருவகாலமான மஹா பருவகாலத்திற்கு தாமதமாகக் காணப்பட்டது.

நிதியாண்டில் அதிகரித்த பணவீக்கமானது, ஏப்ரல் 2022 இல் தீவிரமாக 30% ஆக அதிகரித்து விலைகளிலான அழுத்தங்களை பிரதிபலித்தது. பணவீக்கத்தின் பிரதான இயக்கியான உணவு பணவீக்கமானது ஏப்ரல் 2022 இன் இறுதியில், பகுதியளவில் இலங்கை ரூபாயின் பெறுமதியிறக்கத்தின் விளைவாக, 47% ஆக உயர்வடைந்தது. உணவல்லா பணவீக்கமானது அதேபோன்ற பாங்கினை பின்பற்றி ஏப்ரல் 2022 இல் 22% ஆக அதிகரித்து மாதத்தில் ஏற்பட்ட எரிபொருள்களின் மீள்விலையிடலை பிரதிபலித்தது.

வேலையின்மையானது 5.2% இலிருந்து 4.6% ஆக வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், தொழிற் சேனையின் பங்குபற்றல் 50.1% இலிருந்து 49.5% ஆக வீழ்ச்சியடைந்தமையானது தற்போதைக்கு ஒரு திருப்புமுனையாகும். ஏனெனில், ஆக்கவளமுடைய தொழிலில் பங்குபற்றும் சனத்தொகையிலும் பார்க்க பங்குபற்றாத சனத்தொகை விஞ்சியுள்ளது. இதனை விழித்துரைப்பது, ஒருவேளை நாட்டிற்கு பாரிய சவால்களில் ஒன்றாகக் காணப்படுவதுடன், நாம் முன்னேற்றமடைய வேண்டுமாயின் பெண்கள் மற்றும் இளைஞர்களின் பங்குபற்றலை அதிகரிப்பதற்கு அவர்களை நாம் ஊக்கமளிப்பதற்கான தேவை காணப்படுகின்றது.

# தலைவர்/பிரதம நிறைவேற்றுநரின் செய்தி

தொற்றின் மூன்றாம் அலையானது உல்லாசத் துறையின் மீட்டலையும் தாமதித்ததுடன், அந்நிய செலாவணி உட்பாய்ச்சல்களுக்கும் ஒரு முட்டுக்கட்டையாக இருந்தது. ஒரு முக்கிய அந்நிய செலாவணி மூலமான தொழிலாளர் பணமனுப்புதலும் வீழ்ச்சியடைந்தது. இந்த தொற்றுக் காலத்தின்போது தொழில்வாய்ப்புக்கான புலம்பெயர்வுகள் மந்தமாகக் காணப்பட்டன. அத்துடன் முறையான சந்தைக்கும் தெளிவற்ற சந்தைக்கும் இடையேயான பாரிய பரிமாற்ற வீத வித்தியாசங்களின் விளைவாக முறைசாரா மார்க்கங்கள் விரிவடைந்தன. உணவு, எரிபொருள், மருந்துகளது இறக்குமதிக்கு வசதியளிப்பதற்காக இலங்கை மத்திய வங்கி ஏற்றுமதியாளர்கள் ஏற்றுமதி வருவாயினை ரூபாயாக மாற்றுவதனை கட்டாயமாக்கியதுடன் மாற்றல் செய்யப்பட்ட ஏற்றுமதி வருவாயின் ஒரு பகுதியினையும் தொழிலாளர்களது பணமனுப்புதல்களையும் இலங்கை மத்திய வங்கிக்கு விற்பனை செய்யுமாறு வங்கிகளை பணித்தது. நாணயமாற்று வீதத்திற்கு துணைபுரிவதற்காக இலங்கை மத்திய வங்கி கடைப்பிடித்த பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக நிதியாண்டின் முதல் பதினொரு மாதங்களில் நாணயமாற்று வீதம் 2.4% ஆல் மாத்திரமே வீழ்ச்சியடைந்தது. மார்ச் மற்றும் ஏப்ரல் 2022 இல் ரூபாயின் பெறுமதி 75% வீழ்ச்சியினைக் கண்டதுடன் வெளிவாரித் துறையின் சிக்கலின் காரணமாக இலங்கை ரூபாய் மிதக்கவிடப்பட்டது.

வட்டி வீதங்கள் ஆகஸ்ட் 2021 முதல் உயர்வடைய ஆரம்பித்து வருடத்தில் கணிசமானளவு அதிகரித்தது. கொள்கை வட்டிவீதங்கள் பொருளாதாரத்தில் விலை ஸ்திரத்தன்மையினை இலக்குவைத்து ஏப்ரல் 2022 இல் 700 அடிப்படை புள்ளிகளினால் அதிகரிக்கப்பட்டது. அந்நிய செலாவணி சிக்கலானது எரிபொருள் மற்றும் எரிவாயு ஆகியவற்றின் பற்றாக்குறையினை உருவாக்கி, போக்குவரத்து முறைகள் மற்றும் மனைகளில் இடையூறுகளை விளைவித்தது. பணவீக்கத்துடன் சேர்ந்து இந்த பற்றாக்குறைகளும் மக்களுக்கு கடுமையான நெருக்கடியினை உருவாக்கியது. சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகள் நிறைவுற்று நிதிகள் விடுவிக்கப்படும் வரைக்கும் அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு நிதியளிப்பதற்காக நாடு சில கடன் வசதிகளைப் பெற்றுள்ளது. எவ்வாறாயினும், வெளிவாரித்துறை சிக்கல் காரணமாக எதிர்வரும் மூன்று மாதங்கள் மிகவும் சவால்மிக்கதாக காணப்படும்

என எதிர்பார்க்கப்படுவதுடன், இருப்பினும் அதன்பின்னரான மாற்றங்கள் ஒரு நிலைபேறுள்ள மீட்பிற்கு வழிசமைக்கும் என நாம் நம்பிக்கையுடன் உள்ளோம்.

## உறுதியின் சக்தி

தொற்றினுள் நாம் உள்நுழைந்து அதன் சவால்களை வெற்றிகொண்டு திடமாக வெளிவந்ததன் நிமித்தம் ஹேலீஸில் உறுதியாக ஊக்கப்படுத்தப்படும் அணிகளின் சக்தியினை நாம் புரிந்துகொள்கின்றோம். பல வருடங்களாக நாம் கட்டியெழுப்பிய இந்த நம்பிக்கை வட்டமானது வெற்றியடைவதற்கான சித்தத்துடன் 2021/22 இனுள் முயற்சியுடன் மற்றும் பதமறிந்த அணியானது எமது பாரிய பலமாகும்.

விளைவுகள் சான்று பகிர்கின்றன. ஹேலீஸ் பிஎல்சி வருடத்தில் உயர்வடைந்த பன்முகமான சவால்களைக் கடந்து வரிக்கு முந்திய உழைப்பாக ரூபா 35.72 பில்லியனை பதிவுசெய்ததுடன், இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது ஓர் அற்புதமான 86% வளர்ச்சியாகும், இதுவே இந்த நேரத்திலான உயர்ந்த இலாபமாகும். வருவாயானது ரூபா 241.28 பில்லியனிலிருந்து ரூபா 338.01 பில்லியனாக உயர்வடைந்து 40% அதிகரிப்பினை காட்டியது. போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் துறையானது ஓர் திடமான 84% வளர்ச்சியுடன் ரூபா 69.27 பிலலியனை அடைந்து குழும வருவாயில் 20% பங்களிப்பினை வழங்கியுள்ளது. நுகர்வோர் மற்றும் சில்லறை துறையானது 14% வளர்ச்சியுடன் ரூபா 83.54 பில்லியனை அடைந்து குழும வருவாய்க்கான உயர்ந்த பங்களிப்பாளராக காணப்பட்டது.

குழும EBITDA மற்றும் EBIT முறையே 27% மற்றும் 29% ஆல் அதிகரித்து ரூபா 42.01 பில்லியன் மற்றும் ரூபா 33.59 பில்லியனாகக் காணப்பட்டது. EBITDA மற்றும் EBIT க்கான பிரதான பங்களிப்பவர்களாக நுகர்வு மற்றும் சில்லறைத் துறை மற்றும் போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் துறைகள் காணப்பட்டதுடன் இவ்விரண்டு துறைகளும் மொத்தத்தில் 50% பங்களிப்பினை வழங்கி குழுமத்தின் காசுப்பாய்ச்சல்களில் இவ்விரு துறைகளின் முக்கிய பங்களிப்பு பிரதிபலிக்கப்படுகின்றது.

மார்ச் 2022 இல் நாம் விதிவிலக்கான பரிமாற்றல் இலாபங்களை பதிவுசெய்ததன் விளைவாக நிதி வருமானமானது 430% ஆல் அதிகரித்து ரூபா 16.83 பில்லியனை எட்டியது. கை பாதுகாப்பு, தூய்மைப்படுத்தல், ஆடைகள் மற்றும் போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் துறைகள் மொத்தத்திற்கு கணிசமான பங்களிப்பினை வழங்கி மொத்த தொகையின் 69% இனை பிரதிபலித்தது. நிதிச் செலவுகள் 48% ஆல் அதிகரித்து ரூபா 14.88 பில்லியனை அடைந்தது. இதற்கான காரணியாக தொழிற்படு மூலதனத்திற்கு நிதியளிப்பதற்காக அதிகரித்த கடன் பெறுகைகள் காணப்பட்டது.

நிதிச் செயற்திறனுக்கான எமது பிரதான அளவுகோளான வரிக்கு முந்திய இலாபமானது 86% ஆல் அதிகரித்து ரூபா 35.72 பில்லியனை அடைந்தது. இதற்கு போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் துறையானது 30% பங்களிப்பினையும், நுகர்வோர் மற்றும் சில்லறை மற்றும் கைப் பாதுகாப்பு முறையே 16% மற்றும் 14% பங்களிப்பினை வழங்கின. உல்லாசத் துறையைத் தவிர்ந்த அனைத்து துறைகளும் அதிகரித்த வரிக்கு முந்திய இலாபத்தினை பதிவுசெய்தன. ஆடைகள், போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் மற்றும் சூழல் தீர்வுகள் துறைகள் முறையே 337%, 238% மற்றும் 132% அதிகரிப்புகளை பதிவுசெய்தன.

விளைவுறு வரி வீதமானது வரி கழிக்கத்தக்க செலவினங்களின் அதிகரிப்பின் நிமித்தம் 27% இலிருந்து 21% ஆக குறைவடைந்து வரிக் கட்டணமாக ரூபா 7.62 பில்லியன் காணப்பட்டது. இதன் பிரகாரம், குழுமத்தின் வரிக்கு பிந்திய இலாபமானது 100% ஆல் அதிகரித்து முன்னைய வருடத்தின் ரூபா 14.05 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2021/22 நிதியாண்டில் ரூபா 28.10 பில்லியனாகக் காணப்பட்டது. இது வரலாற்றுப் பதிவேட்டில் ஓர் புதிய பதிவாக குழுமம் அடைந்த அதியுயர்ந்த இலாபமாக காணப்படுகின்றது.

## அதிகரித்த கொள்திறன் மற்றும் மீளெழுச்சி

மொத்தச் சொத்துக்கள் ரூபா 279.38 மில்லியனிலிருந்த 44% ஆல் அதிகரித்து ரூபா 403.08 பில்லியனை அடைந்ததன காரணமாக குழுமத்தின் ஐந்தொகையானது தொடர்ச்சியாக விரிவடைந்தது. இது பாரியளவில், வருமதிகள், கையிருப்பு மற்றும் ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆகிவற்றிலான அதிகரிப்பின் நிமித்தமாகும். இது குழுமத்தின் அதிகரித்த உழைக்கத்தக்க கொள்திறனை பிரதிபலிப்பதுடன், ஏப்ரல் 2021 இல் சவுத் ஏசியா டெக்ஸ்டைல்ஸ் லிமிட்டட்டின் கையகப்படுத்தலானது இவ்வருடத்தில் வெற்றிகரமாக குழுமத்திற்கு ஓர் சாத்தியமான பங்களிப்பினை வழங்கியது. குறிப்பாக, இது ஹேலீஸ் ∴வெப்ரிக் பிஎல்சி இனை நாட்டின் பாரிய துணி உற்பத்தியாளராக மாற்றியுள்ளது. துறையானது வழங்கல் தொடரினை சுருக்குவதற்காக துணிகளின் இறக்குமதியினை குறைப்பதானது எமக்கு பிரகாசமான எதிர்காலத்தினை வழங்குகின்றது. போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் துறையானது மற்றுமோர் கொள்கலன் கப்பலது கையகப்படுத்தலுடன், அவற்றின் மிதக்கும் கலங்களை அதிகரித்தது. இது இலங்கையின் மிகப்பெரிய கப்பல் என்பதுடன் அதன் உழைக்கும் கொள்திறனை மேம்படுத்தியது. இதற்கும் மேலாக அனேகமான துறைகள் அவற்றின் கொள்திறனை அதிகரிப்பதற்காக, சந்தையில் டொலர்களுக்கு காணப்பட்ட போதாமையின் காரணமாக ஓர் வரையறையான விதத்திலேனும் முதலீட்டினை மேற்கொண்டன. கொள்திறனிலான கணிசமான அதிகரிப்பானது குழுமத்தின் அந்நிய செலாவணி உழைப்புகளை பலப்படுத்தும் என்று இங்கு குறிப்பிடுவது முக்கியமாகும். கப்பல் போக்குவரத்தின் தாமதங்கள் காரணமாக அதிகரித்த காத்திருப்புக்

காலத்திற்கு இடமளிப்பதற்காக குழுமமானது மூலப் பொருட்கள் மற்றும் செய்து முடிக்கப்பெற்ற பொருட்களின் இருப்பினை அதிகரித்து குழுமத்தின் கையிருப்பானது 55% ஆல் அதிகரித்தது. வருமதிகளிலான அதிகரிப்பானது பெரும்பாலும் போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் மற்றும் நுகர்வோர் மற்றும் சில்லறை துறைகளினாலாகும் என்பதுடன் இவை முறையே 16% மற்றும் 41% ஆல் அதிகரித்தன.

நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்களின் மிகையூட்டல் காரணமாக மொத்த உரித்துவமானது 40% ஆல் அதிகரித்து ரூபா 105.29 பில்லியனை எட்டியது. வட்டியுடனான பொறுப்புக்கள் இவ்வாண்டில் 50% ஆல் அதிகரித்தன. இது கையிருப்பு, விரிவாக்கல் ஆகியவற்றிற்கான நிதியளிப்பு மற்றும் வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட கடன்களை ரூபாய்க்கு மாற்றல் செய்யும்போது ஏற்படும் பரிமாற்றல் வித்தியாசங்களினால் ஏற்பட்டது. இதற்கமைய, கடன் உரித்துவ விகிதாசாரமானது 1.63:1 க்கு அதிகரித்ததுடன் நிதிப் பயனீடானது 63% க்கு அதிகரித்தது.

இவ்வாண்டில் பொறுப்பேற்கப்பட்ட முதலீடுகள் குழுமத்தின் அந்நிய செலாவணி திரவத்தன்மை நிலைமைகளின் கட்டமைப்புசார் மாற்றங்களை விழித்துரைக்கின்றன. கையகப்படுத்தப்பட்ட சொத்துக்கள் ஏற்கனவே சாத்தியமான பங்களிப்பினை வழங்குவதுடன் குழுமத்தின் அந்நிய செலாவணி திரவத்தன்மையினை மிகையூட்டி நாணயமாற்று வீத நிலையற்ற தன்மைக்கான எமது மீளெழுச்சியினையும் பலப்படுத்துகின்றது.

## பொருளாதாரத்திற்கான எமது சம்பந்தம்

நாட்டின் சமூகபொருளாதார முன்னேற்றத்திற்கு ஹேலீஸ் பிஎல்சி ஓர் முக்கிய பங்களிப்பவராகும். இலங்கையிலிருந்தான அந்நிய செலாவணி உழைப்புகள் இவ்வருடத்தில் 45% ஆல் அதிகரித்து US$ 615.98 மில்லியனை எட்டியதுடன் இது இதே காலப்பகுதியில் நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 4.2% ஆகும்.

மேலாக, இவ்வருடத்தில் குழுமமானது அதன் வெளிநாட்டு துணைக்கம்பனிகளிடமிருந்து US$ 6.24 மில்லியனை பங்கிலாபமாக பெற்றுள்ளதுடன் இது நாட்டிற்கான அந்நிய செலாவணி உட்பாய்ச்சல்களுக்கு மிகையூட்டியாக காணப்பட்டது.

குழுமமானது இலங்கையில் 29,258 நபர்களை பணிக்கமர்த்தியுள்ளதுடன், பொருளாதாரத்தில் தொழில்களை உருவாக்கி 62.8% ஆன பணியாட்கள் மேல் மாகாணத்திற்கு வெளியே நிலைகொண்டுள்ளார்கள். ரூபா 104.59 பில்லியன் உள்ளூர் வழங்குநர்களுக்கு செலுத்தப்பட்டு அவர்களது வளர்ச்சிக்கு துணைபுரிகின்றது. எமது வழங்கல் தொடரானது 10,500 க்கும் அதிகமான நுண்தொழில்முனைவோரது வாழ்வாதாரங்களுக்கு துணைபுரிகின்றது. இவர்களுக்கு கட்டமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களினூடாக தொழில் நுட்ப அறிவானது வழங்கப்படுகின்றது. குழுமத்தின் செயற்பாடானது நாடு முழுவதனையும் உள்ளடக்குவதுடன் ஒவ்வொரு துறையும் அவற்றின் கைத்தொழில்துறையில் முக்கிய பங்களிப்பினை வகிப்பதுடன் இவை பற்றி விசேடமாக துறைசார் மீளாய்வு அறிக்கையில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

## வணிக நிலைக்குத்துக்களின் மீளாய்வு

ஹேலீஸ் அதன் வருவாயில் 52% இனை ஏற்றுமதி மற்றும் ஏனைய அந்நிய செலாவணி உழைப்புகளில் பெற்றுக்கொள்வதுடன் எஞ்சியவை உள்ளூர் சந்தையில் பெற்றுக்கொள்ளப்படுவதுடன் இங்கு அது ஓர் முக்கிய பங்காளியாகும். கைப் பாதுகாப்பு, தூய்மைப்படுத்தல், சூழல் தீர்வுகள், ஆடைகள் மற்றும் போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் என்பவற்றின் உழைப்புகள் பெரும்பாலும் வெளிநாட்டு நாணயத்தில் காணப்படுவதுடன் ஏனைய துறைகளது உழைப்புகள் இலங்கை ரூபாய்க்கு நிறையிடப்பட்டுள்ளன. மொத்த சொத்துக்களைப் பொறுத்தளவில் நுகர்வோர் மற்றும் சில்லறைத் துறையானது பாரிய துறையாகும் என்பதுடன் இது மொத்த சொத்துக்களின் 23% க்கு கணக்கீடு செய்கின்றது. கொள்திறன்களிலான முதலீட்டுடன் போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் மற்றும் ஆடைகள் மொத்த சொத்துக்களில் அவற்றின் பங்கினை அதிகரித்து வருட இறுதியில் மொத்த சொத்துக்களில் முறையே 17% மற்றும் 9% இனை கணக்கீடு செய்தது. அந்நிய செலாவணி உருவாக்கத்தினை அதிகரிக்கும் நோக்கில் இது குழுமத்தின் முதலீட்டு திசையிலான ஓர் கட்டமைப்பான மாற்றத்தினை பிரதிபலித்தது.

அமெரிக்க டொலரிலான குழுமத்தின் செயற்திறனும் அற்புதமாகக் காணப்பட்டது. இங்கு புரள்வானது 25% ஆல் வளர்ச்சியடைந்து US$ 1.60 பில்லியனை அடைந்து திடமான நடவடிக்கை மட்டங்களை பிரதிபலிக்கின்றது. வட்டி மற்றும் வரிக்கு முந்திய உழைப்பானது 16% வளர்ச்சியுடன் ரூஐகூ 159.35 மில்லியமானக் காணப்பட்டது. இது வரம்புகள் சற்று வீழ்ச்சியடைந்ததனால் அதிகரித்த பருமனினால் இயக்கப்பட்டது. தேறிய இலாபமானது முன்னைய வருடத்திலான மாற்றத்துடன் ஒப்பிடும்போது தேறிய நிதி வருமானத்தினால் உந்தப்பட்டது. இதற்கமைய, வரிக்கு பிந்திய இலாபமானது US$ 133.28 மில்லியனாகக் காணப்பட்டதுடன் இது ஓர் அற்புதமான 79% அதிகரிப்பாகும். 11 மாதங்களாக முறைமைப்படுத்தப்பட்ட நாணயமாற்று வீதத்தினைத் தொடர்ந்து நிதியாண்டின் இறுதி மாதத்தில் ஏற்பட்ட 46% பெறுமதியிறக்கத்தின் தாக்கமானது 52% ஆன உழைப்பினை அந்நிய செலாவணியில் உழைக்கும் குழுமத்தில் எப்படியிருக்கும் என்று சிந்தித்தல் தகுதியானதாகும். ஹேலீஸ் பிஎல்சி அதன் துணைக்கம்பனிகளிடமிருந்து பங்கிலாபங்களாக US$ 24.41 மில்லியனை பெற்றதுடன் (ஒருங்கிணைப்பின்போது அகற்றப்படுகின்றது) இதில் 26% வெளிநாட்டு நாணயங்களிலாகும்.

### நுகர்வோர் மற்றும் சில்லறை

செயற்படும் நாடு:
இலங்கை

- Revenue Rs. 83.54 bn ▲ 14%
- EBITDA Rs. 10.35 bn ▲ 44%
- Op. Profit Rs. 8.50 bn ▲ 52%
- PBT Rs. 5.77 bn ▲ 46%
- PAT Rs. 4.30 bn ▲ 59%
- Capex Rs. 841.68 mn
- Total Assets Rs. 91.03 bn ▲ 29%
- Value Created Rs. 22.65 bn ▲ 43%

### போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல்

செயற்படும் நாடுகள்:
இலங்கை / மாலைதீவு / பங்களாதேஷ் / இந்தியா / மியன்மார் / சிங்கப்பூர்

- Revenue Rs. 69.27 bn ▲ 84%
- EBITDA Rs. 10.02 bn ▲ 80%
- Op. Profit Rs. 8.42 bn ▲ 111%
- PBT Rs. 10.87 bn ▲ 238%
- PAT Rs. 8.61 bn ▲ 243%
- Capex Rs. 3.28 bn
- Total Assets Rs. 67.97 bn ▲ 71%
- Value created Rs. 16.67 bn ▲ 87%
- Earnings in Foreign Exchange US$ 166.78 mn

### கை பாதுகாப்பு

செயற்படும் நாடுகள்:
இலங்கை / தாய்லாந்து / இத்தாலி

- Revenue Rs. 37.86 bn ▲ 25%
- EBITDA Rs. 3.54 ▼ 43%
- Op. Profit Rs. 2.90 bn ▼ 47%
- PBT Rs. 5.00 bn ▼ 10%
- PAT Rs.4.05 bn ▼ 8%
- Capex Rs. 3.11 bn
- Total Assets Rs. 35.30 bn ▲ 28%
- Value created Rs. 12.50 bn ▲ 33%
- Foreign Exchange Earnings: US$ 82.28 mn
- Dividends from foreign subsidiaries US$: 3.37 mn

# தலைவர்/பிரதம நிறைவேற்றுநரின் செய்தி

## நுகர்வோர் மற்றும் சில்லறை

நுகர்வோர் மற்றும் சில்லறைத் துறையானது வரிக்கு பிந்திய இலாபமாக ரூபா 4.30 பில்லியனை பதிவு செய்ததுடன், இது அதன் 145 வருட வரலாற்றில் அடைந்த உயர்ந்த இலாபம் என்பதுடன் முன்னைய வருடத்தில் பதிவு செய்த இலாபத்திலிருந்து 59% அதிகரிப்பாகும். சில்லறை ஜாம்பவானான, சிங்கர் ஸ்ரீலங்கா, 2022 ஆம் வருடத்திற்கான மக்களின் வணிக நாமமாக, தொடர்ந்து 15 வருடங்களாக, முடிசூட்டப்பட்டதுடன் நாட்டில் சில்லறை வர்த்தகத்தில் மறுக்கவியலாத தலைவராகும். நாடு பூராவுமான பிரசன்னம், தெளிவாக வெளிப்படுத்தப்பட்ட மூலோபாய முன்னுரிமைகளுடன் இருப்பு வைத்திருக்கும் அலகுகளின் எண்ணிக்கையிலான அதிகரிப்பு மற்றும் இ-வர்த்தகம் என்பன கம்பனியினை வளர்ச்சிப் பாதையில் நிலைநிறுத்தியது. மின் மற்றும் இலத்திரணியல் உபகரணங்களுக்கான நிலைபேறுள்ள கேள்வியானது புரள்வில் 14% வளர்ச்சியுடன் ரூபா 83.54 பில்லியனை எட்ட இயலுமையாயிருந்தது. கேள்வியுடன் அதன் நாடுபூராவுமான வலையமைப்பு மற்றும் விற்பனைக்கு பிந்திய சேவை என்பன சிங்கர் இலங்கையின் நுகர்வோர் மற்றும் வர்த்தக சில்லறை விற்பனையாளர்களிடையே 1 ஆம் நிலையினை தக்கவைப்பதனை இயலுமையாக்கியது.

அந்நிய செலாவணித் திரவத்தன்மை கட்டுப்பாடுகள் வளமூலமிடுதல் மூலோபாயங்களில் ஓர் மாற்றம் தேவைப்படுவதனை எடுத்துக்காட்டியதுடன் இதன் விளைவாக ஓர் உள்;ர் வழங்குநர் அடித்தளமானது வளர்க்கப்பட்டது. ரெக்னிஸ் உம் உற்பத்தி செய்யும் உபகரணங்களின் வீச்சினை பரவலாக்குவதன் மூலம் சந்தையில் திடமாக நிலைநிறுத்திக் கொள்வதற்கான ஓர் வாய்ப்பினைக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், இறக்குமதி செய்யப்படும் மூலப் பொருட்களின் கிரயமும் வட்டி வீதங்களிலான மேல்நோக்கிய அசைவுகளும் ஓர் சவாலாகக் காணப்படும்.

சிங்கர் பைனான்ஸ் பிஎல்சி ரூபா 959.66 மில்லியனை வரிக்கு முந்திய இலாபமாக அடைந்து வரலாற்றில் அதன் சிறந்த செயற்திறனை பதிவுசெய்தது. பிரான்ட் பைனான்ஸ் லங்காவினால் நாட்டிலுள்ள முதல் 10 கம்பனிகளுள் ஒன்றாக வரிசைப்படுத்தப்பட்ட இக்கம்பனியானது வளர்ச்சிக்கான சிறந்த சாத்தியத்தினைக் கொண்டுள்ளது. இந்த மீளெழுச்சி மிக்க நிறுவனத்திற்கான பிரதான மூலோபாயம் கிளை விரிவாக்கம், அதன் திடமான திரவத்தன்மை நிலைப்பாட்டில் பயனடைதல் மற்றும் வணிக நாமம் என்பவற்றினூடாகும்.

இந்த துடிப்பான துறைக்கான எதிர்காலமானது, அந்நிய செலாவணி கட்டுப்பாடுகள் மற்றும் தற்போதைய வீழ்ச்சியடையும் செலவழிக்கக்கூடிய வருமானம் என்பவற்றுக்கு மத்தியில் சாத்தியமாகக் காணப்படுகின்றது. வளமூலமிடுதல் மூலோபாயங்களிலான மாற்றங்கள் வாடிக்கையாளர்களுக்கு எமது உற்பத்தித் தேக்கத்தின் பொருந்துமையினை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுவதுடன் வளர்ச்சியினை இயக்குவதற்கு சாத்தியமான பிரிவுகள் ஆராயப்படலாம். நாடுபூராவுமான வலையமைப்பு, ஓர் வளர்ச்சியடையும் இயங்கலை பிரசன்னம் மற்றும் ஓர் திடமான வணிக நாம உறுதுணை என்பன இத்துறையின் பேராவலான வளர்ச்சித் திட்டங்களுக்கு துணைபுரியும்.

## போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல்

அதியுயர்ந்த வரிக்கு பிந்திய இலாபத்தினை வழங்கிய அட்வான்டிஸ் குழுமத்திற்கு இது ஓர் அமைதியான நீரோட்டமாகும். வரிக்கு பிந்திய இலாபமாக ரூபா 8.61 பில்லியனை அடைந்து குழுமத்தின் வரிக்கு பிந்திய இலாபத்திற்கு 30% பங்களிப்புடன் அதிக பங்களிப்பினை வழங்கிய துறையாகக் காணப்படுகின்றது. கடந்த வருடத்தில் இத்துறையினை 6 நிலைக்குத்துகளாக மீள்கட்டமைக்கப்பட்டமை வாடிக்கையாளர் மதிப்பு முன்மொழிவினை மேம்படுத்தியது மற்றும் நிலைக்குத்துக்களிடையே இணைதிறணை உச்சப்படுத்தியமையானது நாட்டின் முன்னணி ஏற்பாட்டியல் வழங்குநராக அதன் நிலையினை பலப்படுத்தியது.

இத்துறையின் செயற்திறனானது ஏற்றுமதி மற்றும் கலம் மாற்றி சரக்கேற்றல் வணிகத்திலான திடமான வளர்ச்சி, நாணயமாற்ற பரிமாற்றலிலான இலாபங்கள் மற்றும் ஏற்பாட்டியல் மற்றும் களஞ்சியப்படுத்தல் செயற்பாடுகளுக்கான அதிகரித்த கேள்வி என்பவற்றால் உந்தப்பட்டது. உலகளாவிய சிக்கல்கள் காரணமாக வழங்கல் தொடர் முகாமைத்துவம் ஓர் முக்கியமான செயற்பாடாகக் காணப்பட்டமையும் ஓர் காரணமாகும். சரக்குக் கட்டண வீதத்திலான அதிகரிப்பும் இத்துறையின் இலாபகரத்தன்மைக்கு துணைபுரிந்தது.

சர்வதேச சரக்கனுப்புக்கட்டண முகாமைத்துவ நிலைக்குத்தானது புரள்வு மற்றும் தேறிய இலாபத்தில் மூன்று இலக்க வளர்ச்சியினை வழங்கியது. இதற்கு உறுதுணையாக, ஏற்றுமதி மற்றும் கலம் மாற்றி சரக்கேற்றல் வணிகத்தின் விரிவாக்கம், சரக்கனுப்புக்கட்டண அதிகரிப்பு மற்றும் ரூபாயின் பெறுமதியிறக்கத்துடன் நாணயமாற்று இலாபங்கள் காணப்பட்டன. கடல்சார் மற்றும் பொறியியல் செங்குத்தானது ஓர் கொள்களன் கப்பலை கையகப்படுத்தி இலங்கையில் அத்தகைய கப்பலைக்கொண்ட ஒரே கம்பனியாகக் காணப்படுகின்றது. திடமான கேள்வி, மாலைதீவுடனான அதிகரித்த செயற்பாடுகள், மற்றும் கப்பல் எரிபொருள் தொடர் செயற்பாடுகள் என்பவற்றுடன் புதிய கையகப்படுத்தலிலான உழைப்புகளும் இலாபகரத்தன்மைக்கு துணைபுரிந்தன. ஒருங்கிணைந்த ஏற்பாட்டியலும் கேள்வியில் திடமான வளர்ச்சியினை கண்டது. இது வாடிக்கையாளர்கள் வழங்கல் தொடர் சிக்கல்களை வெற்றிகொள்வதற்காக

### தூய்மைப்படுத்துதல்

**செயற்படும் நாடுகள்:**

இலங்கை / இந்தோனேஷியா / தாய்லாந்து / ஐக்கிய இராச்சியம்/ அவுஸ்திரேலியா /அமெரிக்கா / சிங்கப்பூர் / இந்தியா /பிரிட்டிஷ் வேர்ஜின் ஐலண்ட்

- Revenue Rs. 32.75 bn ▲ 29%
- EBITDA Rs. 3.72 ▼ 26%
- Op. Profit Rs. 3.08 bn ▼ 31%
- PBT Rs. 4.64 bn ▲ 4%
- PAT Rs. 3.71 bn ▲ 4%
- Capex Rs.1.68 bn
- Total Assets Rs. 38.16 bn ▲ 66%
- Value created: Rs. 10.17 bn ▲ 28%
- Foreign Exchange Earnings: US$ 68.95 mn
- Dividends received from Foreign Subsidiaries US$ 2.69 mn

### விவசாயம

**செயற்படும் நாடுகள்:**

இலங்கை / பங்களாதேஷ்

- Revenue Rs. 24.09 bn ▲ 25%
- EBITDA Rs. 3.26 ▲ 43%
- Op. Profit Rs. 3.01 bn ▲ 52%
- PBT Rs. 2.30 bn ▲ 35%
- PAT Rs. 1.71 bn ▲ 41%
- Capex Rs. 293 mn
- Total Assets Rs. 25.83 bn ▲ 61%
- Value created: Rs. 8.01 bn ▲ 55%
- Foreign Exchange Earnings: US$ 13.19 mn
- Dividends from Foreign Subsidiaries US$ 0.18 mn

### பெருந்தோட்டத்துறை

**செயற்படும் நாடு:**

இலங்கை

- Revenue Rs.17.37 bn ▲ 9%
- EBITDA Rs. 3.02 ▲ 28%
- Op. Profit Rs. 2.45 bn ▲ 30%
- PBT Rs. 2.85 bn ▲ 61%
- PAT Rs. 2.62 bn ▲ 69%
- Capex Rs. 858.72 mn
- Total Assets Rs. 18.19 bn ▲ 12%
- Value created: Rs. 10.04 bn ▲ 22%
- Foreign Exchange Earnings: US$ 82.25 mn

கையிருப்பினை கட்டியெழுப்பும் வேளை கையிருப்பு முகாமைத்துவத்தில் நிபுணத்துவத்தினை வேண்டியதனாலாகும்.

எக்ஸ்பிரஸ் ஃபிரெய்ட், CityPack உடன் இ-வர்த்தகத்தினால் உறுதுணையளிக்கப்பட்டு இறுதி மைல் விநியோகத்தினை பலப்படுத்தியது. ப்ரொஜக்ட்ஸ் அன்ட் என்ஜினியரிங் முன்கட்டமைக்கப்பட்ட உருக்கு கட்டிடங்களில் அதன் முன்னணியினை பராமரித்தது ஆனால் பாரிய அளவிலான உட்கட்டமைப்பு திட்டங்களின் மந்த நிலையினால் தாக்கமடைந்தது. சர்வதேச செயற்பாடுகள் திடமான வளர்ச்சியினை அதன் பங்களாதேஸ், இந்தோனேஸியா மற்றும் மாலைதீவு வணிகங்களில் பதிவுசெய்தது. மியன்மாரிலுள்ள வணிகமானது அரசியல் உறுதியின்மையினால் பாதிக்கப்பட்டது. வான் போக்குவரத்து வணிகமும் சரக்கு கையாளுகையிலான வளர்ச்சியினால் துணையளிக்கப்பட்டு ஓர் சிறந்த ஆண்டை கண்டது. யுனிசிஸ்ட் இன்ஜினியரிங் பிஎல்சி இவ்வருடத்தில் அதன் செயற்பாடுகளை நெறிப்படுத்துவதில் கவனஞ்செலுத்தியதுடன் எதிர்வரும் வருடத்தில் வளர்ச்சிக்கு தயாராயுள்ளது.

அட்வான்டிஸ் குழுமமானது எதிர்வரும் வருடங்களில் வழங்கல் தொடரில் விரிவான பிரசன்னத்துடன் வளர்ச்சிக்கு நன்கு நிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன் கொண்டுள்ள கொள்திறனைப் பயன்படுத்தி வளர்ச்சிக்கான மேலும் வசதியினைக் கொண்டுள்ளது. அதன் வளர்ச்சி இலட்சியங்களுக்கு ஓர் திடமான சாதனை மற்றும் நற்பெயருடன் இணைந்த ஓர் கடப்பாட்டுடனான அணியானது துணைபுரிகின்றது.

## கை பாதுகாப்பு

கைப் பாதுகாப்புத்துறையின் மேல் வரிசை வளர்ச்சியானது 25% ஆக காணப்பட்டதுடன், இது பருமனிலான வளர்ச்சி மற்றும் தெரிவுசெய்யப்பட்ட சந்தைகளில் வாடிக்கையாளர் கையகப்படுத்தலினால் துணையளிக்கப்பட்டது. ஒட்டுமொத்தமாக, முன்னைய வருடத்தில் தொடங்கிய தொற்றுடன் கேள்வி அதிகரித்ததனைத் தொடர்ந்து இவ்வருடத்தின் முதலாம் அரைப்பகுதி சந்தை வழமைக்கு திரும்பியது. இதன் விளைவாக ஆரம்பத்தில் வாடிக்கையாளர்கள் மிகை இருப்பினை வைத்திருந்ததன் காரணமாக விற்பனைகள் ஆரம்பத்தில் மந்தமாக காணப்பட்டபோதும் இறுதி இரண்டு காலாண்டுகளில் விரைவடைந்தது. அதிகரித்த இறப்பர் விலைகள் மற்றுமோர் சவாலாகக் காணப்பட்டதுடன் இது ஆதாய அளவில் அழுத்தங்களை பிரயோகித்தது. வரிக்கு பிந்திய இலாபமானது 8% ஆல் வீழ்ச்சியடைந்து ரூபா 4.04 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இது குழுமத்தின் வரிக்கு பிந்திய இலாபத்தில் 14% இனை கணக்கீடு செய்கின்றது.

துறையானது அனைத்து 5 உற்பத்தி வசதிகளின் கொள்திறனை அதிகரிப்பதில் கவனஞ் செலுத்தியது மற்றும் உயர்மதிப்புடைய உயர் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளுக்கு மாறியதுடன் கையுறை வகைகளுக்கு துணைபுரிந்தது. முதலாம் வெளிச்ச திட்டத்திற்கு 2,000 க்கும் அதிகமான புதிய விவசாயிகளை சேர்த்ததுடன் வழங்கல் தொடர்கள் பலப்படுத்தப்பட்டதுடன் திட்டமும் விவசாயிகளின் அக்கறைகளை விழித்துரைப்பதற்காக பலப்படுத்தப்பட்டது. சந்தைக்கு உயர் பெறுமதி விளையாட்டு கையுறைகள் உள்ளடங்கலாக 20க்கும் மேலான புதிய உற்பத்திப் பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. விளையாட்டுக் கையுறைகள் வளர்ச்சிக்கான ஓர் சாத்தியமான பிரிவாக காணப்படுகின்றது. இதற்கும் மேலாக, உலக அறிவாளர் சொத்து காரியாலயத்தில் 1 காப்புரிமை உள்ளடங்கலாக ஐந்து புதிய காப்புரிமைகளுக்கு விண்ணப்பம் மேற்கொள்ளப்பட்டன. கடந்த இரண்டு காலாண்டுகளில் காணப்பட்ட உத்வேகத்தினை பராமரித்து எதிர்வரும் வருடத்தில் குழுமமானது வளர்ச்சிக்கு தயார் நிலையில் உள்ளது. ESG க்கான ஓர் திடமான கடப்பாடு மற்றும் திடமான வாடிக்கையாளர் உறவுகள் என்பன அதன் வளர்ச்சி வாய்ப்பு வளங்களுக்கு அடித்தளமாகின்றது.

## தூய்மைப்படுத்தல்

செயலூட்டப்பட்ட தேங்காய் சிரட்டை காபனின் உலகின் பாரிய உற்பத்தியாளராக நிலைகொண்டுள்ள ஹேகாஸ் பூகோளவாரியாக பன்முகப்படுத்தப்பட்ட குழுமமாகும். உலகம் ஓர் பசுமையான மற்றும் நுண்ணறிவான பொருளாதாரத்திற்கு நகர்வதற்கு முனையும் தறுவாயில் பரவலான கைத்தொழில் துறைகளில் ஓர் எண்ணற்ற பிரயோகத்திற்கு பொருந்துகின்ற ஓர் வியாபித்திருக்கும் உற்பத்தியினைக் கொண்டதாகும். உற்பத்திக்கான கேள்வியானது காற்று மற்றும் நீர் சுத்திகரிப்பிற்கான ஓர் அதிகரித்த தேவை மற்றும் மேலும் மேலும் கடுமையாக்கப்படும் சூழல் மற்றும் உணவுப் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள் ஆகியவற்றினால் இயக்கப்படுகின்றது. மருத்துவம், வலு மற்றும் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் அதன் பொருந்துமையானது உற்பத்திப்பொருளினை திடமான கைத்தொழில்களுக்கு பொருத்தமானதாக வைத்திருக்கின்றது. வாடிக்கையாளரை மையப்படுத்திய புத்தாக்கத்தினூடாக மேலும் மேலும் உயர்ந்த பெறுமதி சேர்க்கைக்காக வெட்டுமுனை தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது.

மேல் வரிசை வளர்ச்சியானது 29% உடன் ரூபா 32.75 பில்லியனை எட்டியது. இது விற்பனைக் கலவையில் உயர்ந்த பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளில் அதிகரித்த முனைப்பினை மேற்கொண்டும், சந்தை அபிவிருத்தி மற்றும் பிரகாசமான தங்கத்தின் விலைகள் என்பவற்றால் இயக்கப்பட்டன. அதிகரித்த சரக்கனுப்பல் கட்டணங்கள் மற்றும் மூலப் பொருட்களது விலைகள் என்பன ஆதாய அளவினைக் குறைத்தது. மேலும், மூலப் பொருட்கள் மற்றும் முடிவுப் பொருட்களில் கையிருப்பினை கட்டியெழுப்புதல் அவசியமாகக்

### கைத்தொழில் உள்ளீடுகள், சக்தி மற்றும் வலு

**செயற்படும் நாடுகள்:**
இலங்கை / பங்களாதேஷ்

- Revenue Rs. 7.04 bn ▲ 41%
- EBITDA Rs. 1.54 bn ▲ 8%
- Op. Profit Rs. 1.20 bn ▲ 9%
- PBT Rs. 1.22 bn ▲ 22%
- PAT Rs. 1.05 bn ▲ 32%
- Capex Rs. 68.34 mn
- Total Assets Rs. 15.20 bn ▲ 13%
- Value created: Rs. 2.62 bn ▲ 15%

### சூழல் தீர்வுகள்

**செயற்படும் நாடுகள்:**
இலங்கை / இந்தியா

- Revenue Rs. 11.13 bn ▲ 42%
- EBITDA Rs. 892.43 mn ▲ 9%
- Op. Profit Rs. 717.99 mn ▲ 9%
- PBT Rs. 1.77 bn ▲ 132%
- PAT Rs. 1.50 bn ▲ 127%
- Capex Rs. 360.78 mn
- Total Assets Rs. 17.52 bn ▲ 34%
- Value Created Rs. 3.09 bn ▲ 88%
- Foreign Exchange Earnings: US$ 43.67 mn

### கட்டுமாணப் பொருட்கள்

**செயற்படும் நாடு:**
இலங்கை

- Revenue Rs. 9.52 bn ▲ 62%
- EBITDA Rs. 1.78 ▲ 22%
- Op. Profit Rs. 1.49 bn ▲ 21%
- PBT Rs. 1.38 bn ▲ 35%
- PAT Rs. 1.15 bn ▲ 37%
- Capex Rs. 747.49 mn
- Total Assets Rs. 12.07 bn ▲ 57%
- Value created: Rs. 3.00 bn ▲ 19%
- Foreign Exchange Earnings: US$ 6.73 mn

# தலைவர்/பிரதம நிறைவேற்றுநரின் செய்தி

காணப்பட்டதுடன் இதன் விளைவாக தொழிற்படு மூலதனத்திற்காக அதிகரித்த நிதிச் செலவுகள் ஏற்பட்டன. எவ்வாறாயினும், மார்ச் மாதத்தில் இடம்பெற்ற இலங்கை ரூபாவின் செங்குத்தான பெறுமதியிறக்கமானது நிதி வருமானத்தினை உயர்த்தியதுடன் வரிக்கு முந்திய இலாபம் மற்றும் வரிக்கு பிந்திய இலாபம் என்பன முறையே ரூபா 4.64 பில்லியன் மற்றும் ரூபா 3.71 பில்லியன் ஆக காணப்பட்டன. தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக ஆரம்பத்திலிருந்து பதிவுசெய்த உயர்ந்த இலாபமாக இது காணப்பட்டது.

தூய்மைப்படுத்தல் துறைக்கான எதிர்காலமானது, விசேடமாக வட அமெரிக்கா மற்றும் சீனா போன்ற நாடுகளில் செயலூற்றப்பட்ட கார்பனுக்கான அதிகரித்த கேள்வியின் விளைவாக சாத்தியமாக காணப்படுகின்றது. திடமான உயர்வடையும் தங்கத்தின் விலைகள், திடமான கார்பனது ஓர் பலமான புத்தாக்கம், மேன்மையான மின்தேக்கி கார்பன்கள் மற்றும் இலத்திரணியல் சாதனங்கள் மற்றும் நேரியல் சுற்றுக் கருவிகள் என்பன சந்தை அபிவிருத்தி மற்றும் ஊடுருவலுக்கு துணைபுரிகின்றது. வெளிநாடுகளில் வளர்ச்சிக்கான வாய்ப்பு காணப்படுவதுடன் சரக்கனுப்பல் கட்டணத்திலான சவால்களை வெற்றிகொள்வதற்கு மூலப் பொருட்கள் கிடைக்கக்கூடிய சந்தைகளுக்கு எமது பிரசன்னத்தினை விரிவாக்கலை மேற்கொள்ளுதல் சிறந்ததாகும். முக்கியமான பிரிவுகள் தனித்திறனை கவருதல், விருத்தி செய்தல் மற்றும் தக்கவைத்தல் என்பன மத்திய காலத்தில் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமாகும்.

## விவசாயம்

ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் இவ்வாண்டில் பல சவால்களை முகாமைப்படுத்தி தொடர்ந்தும் இரண்டாவது ஆண்டாக அதன் அதி உயர்ந்த வரிக்கு பிந்திய இலாபமாக ரூபா 1.71 பில்லியனை பதிவு செய்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 41% வளர்ச்சியாகும். நாட்டின் விவசாயத்துறையில் ஓர் வினையூக்கியாக இத்துறையானது விவசாயத்தினை நவீனமயப்படுத்துவதில் ஓர் முக்கிய பங்கினை வகிப்பதுடன் நாட்டின் உணவுப் பற்றாக்குறையினையும் விழித்துரைக்கின்றது. இது விவசாயிகளின் கொள்திறனை கட்டியெழுப்புதல், கருவிகள், விதைகள் மற்றும் ஏனைய உள்ளீடுகளை வழங்குதல் ஊடாக இடம்பெறுகின்றது. அதேவேளை உடன்பாடு கண்ட விலைகளில் விளைச்சலை கொள்வனவு செய்வதனூடாக உலகளாவிய வழங்கல் தொடருடனும் இணைக்கின்றது.

அதன் விளைவாக, ஏப்ரல் 2021 இல் உரம் மற்றும் வேளாண்மை வேதிப்பொருட்களின் தடையானது ஓர் கடுமையான தாக்கமாயிருந்ததுடன் யால மற்றும் மஹா பருவங்களின் விளைச்சலினை பாதித்தது. செப்டம்பர் 2021 இல் இத்தீர்மானத்தின் திரும்பலானது வயல்வெளிகளது அவசியமான தயார்படுத்தலுக்கு தாமதாய் காணப்பட்டது. இத்துறையானது அதன் செலவினங்களை குறைத்ததுடன் செயல்திறனை மேம்படுத்தியது.

உரம் மற்றும் இரசாயனங்களின் தடையின் தாக்கத்தினைக் கருத்திற்கொண்டு அதிகரித்த மட்டத்திலான கடன் இடர்நேர்வைகளை குறைப்பதற்காக காசு வணிக மாதிரிக்கு நகர்ந்தது. அக்ரி எக்கியுப்மன்ட் அதன் சந்தை முதன்மையினை ஒருங்கிணைத்ததுடன் துறையின் இலாபகரத்தன்மைக்கு ஓர் முக்கிய பங்களிப்பவராகும்.

பங்களாதேஸில் ஓர் புதிய விதை பதப்படுத்தல் வசதியுடன் பூ விதை செயற்பாடுகள் விரிவடைந்ததுடன் இது பிராந்தியத்திலான ஊடுருவலுக்கு துணைபுரியும். தொற்றின் காரணமாக உலகளாவிய சந்தைகளின் விதைகளின் அசைவுகள் ஓர் சவாலாகக் காணப்பட்டபோதிலும் உலகளாவிய வாடிக்கையாளர்கள் திடமாக நிலைத்திருந்தார்கள். இதுநாள்வரைக்கும் பங்களாதேஸ் செயற்பாடுகள் அதன் சிறந்த செயற்திறனை பதிவுசெய்ததுடன் துறையானது வழங்கல் கட்டுப்பாடுகளினால் பாதிக்கப்பட்டபோதிலும் அது பொருட்களின் வழங்கலை தடையின்றி மேற்கொள்ளக்கூடியதாயிருந்தது.

உரங்களுக்கான தடை, பணவீக்கம், முடக்கல்கள் மற்றும் எரிபொருள் பற்றாக்குறைகள் மற்றும் உள்ளீடுகளின் கிரயத்திலான அதிகரிப்பு ஆகியவற்றின் ஒன்றுபடுதலுடன், இரண்டு அற்பமான பருவகாலங்களுக்கும் மேலாக விவசாயிகள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டார்கள். நாட்டின் இந்த முக்கிய துறைக்கு துணையளிப்பதற்கான தீர்வுகளை நாம் காண்பது கட்டாயமானதாகும். ஏனெனில், உணவுப் பாதுகாப்பு மற்றும் நாட்டின் தொழிற் சேனையின் 30% மானவர்களது வாழ்வாதாரங்களை மீட்டெடுப்பதற்காகும். ஹேலீஸ் எக்ரிகல்ச்சர் இந்த துறையில் ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சியினை இயக்கும் வெற்றிகரமான தீர்வுகளை தொடர்ந்தும் தேடியவண்ணமுள்ளது.

## பெருந்தோட்டத்துறை

பெருந்தோட்டத்துறையானது கணிசமான சவால்களுக்கு மத்தியில் ஓர் திடமான செயற்திறனை வழங்கியது. இதன் வரிக்கு பிந்திய இலாபமானது 69% ஆல் வளர்ச்சியடைந்த ரூபா 2.62 பில்லியனை எட்டியது. தேயிலை மற்றும் இறப்பரது விலைகளிலான திடமான கேள்வி மற்றும் தரத்திலான முன்னிறுத்தம் மேல் வரிசை வளர்ச்சிக்கு துணைபுரிந்தது. ஏலங்களில் காணப்பட்ட பொது விற்பனை சராசரியான அனைத்து உயர்ந்த 10 விலைகளும் இந்தத் துறையிலிருந்தாகும். தோட்ட முகாமைத்துவக் குழுக்களுக்கு திட்டத்தின் முக்கிய பகுதியான தொழிலாளர்களுடனான தொடர்பாடல் உள்ளடங்கலாக தலைமைத்துவத்தில் பயிற்சியளிக்கப்படுகின்றது. தொழில்புரிவதற்கான சிறந்த இடத்திற்கான மதிப்பாய்வில் இரண்டு கம்பனிகளும் 90 புள்ளிகளைப் பெற்றதுடன் பெருந்தோட்டத்துறையில் 2000 தொழிலாளர்களிடையே தற்போக்காக அவர்களினால் தெரிவு செய்யப்பட்டு மதிப்பாய்வு நடைபெற்றதுடன் இத்துறையில் பங்குபற்றிய

### ஆடைகள்

**செயற்படும் நாடு:**
இலங்கை

- Revenue Rs. 31.67 bn ▲ 117%
- EBITDA Rs. 2.50 bn ▲ 93%
- Op. Profit Rs. 1.76 bn ▲ 100%
- PBT Rs. 3.16 bn ▲ 337%
- PAT Rs. 2.69 bn ▲ 270%
- Capex Rs. 2.29 bn
- Total Assets Rs. 36.71 bn ▲ 217%
- Value created: Rs. 7.41 bn ▲ 165%
- Foreign Exchange Earnings: US$ 147.83 mn

### உல்லாசத்துறை

**செயற்படும் நாடுகள்:**
இலங்கை /மாலைதீவு

- Revenue Rs. 3.42 bn ▲ 154%
- EBITDA Rs. 128.67 mn ▲ 112%
- Op. Loss Rs. 1.02 bn ▲ 44%
- Loss before tax Rs. 1.70 bn ▲ 31%
- Loss after tax Rs. 1.67 bn ▲ 29%
- Capex Rs. 360.22 mn
- Total Assets Rs. 18.66 bn ▲ 19%
- Value created: Rs. 1.56 bn (2021 - Rs. -3 mn)

### ஏனையவைகள்

**செயற்படும் நாடுகள்:**
இலங்கை / நெதர்லாந்து / ஜப்பான் / ஐக்கிய இராச்சியம்

- Revenue Rs. 10.35 bn ▲ 112%
- EBITDA Rs. 6.69 ▲ 46%
- Op. Profit Rs. 6.52 bn ▲ 48%
- PBT Rs. 4.57 bn ▲ 155%
- PAT Rs. 4.50 bn ▲ 165%
- Capex Rs. 149.37 mn
- Total Assets Rs. 79.46 bn ▲ 10%
- Value created: Rs. 11.51 bn ▲ 53%

முதல் கம்பனிகளாக இவை காணப்படுகின்றன. தலவாக்கல டீ எஸ்டேட்ஸ் ஆசியாவில் 2ஆம் இடத்திற்கு தரப்படுத்தப்பட்டதுடன் இது தோட்டங்களில் குடியிருக்கும் எமது தொழிலாளர்களுக்கான கவனிப்பு மற்றும் கரிசனையினை பிரதிபலிக்கின்றது. தொழிலாளர்கள் சிறந்த பறிப்பவர் விருதுகள் மற்றும் பயிற்சி ஆகியவற்றுடன் ஊக்கமளிக்கப்படுகின்றார்கள்.

உரம் மற்றும் வேளாண்மை வேதிப்பொருட்களின் இறக்குமதித் தடையானது ஓர் பேரிடியாக காணப்பட்ட போதிலும் நாம் இவற்றை மீளுருவாக்கல் விவசாய நடைமுறைகளுடன் வெற்றிகண்டோம். ஒவ்வொரு பிரிவினாலும் மண் துருவிகள் கொள்வனவு செய்யப்பட்டு துளைகளை துளையிட்டு அவற்றில் சேதனங்கள் நிரப்பப்பட்டன. நாம் தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்காக களைகளை கையால் பிடுங்கவைத்து அவற்றை கொள்வனவு செய்ததுடன் அவை சேதனங்களுக்காக பயன்படுத்தப்பட்டன. இதன் மூலம் களம் துப்புரவாகியது, தொழிலாளர்களுக்கு மேலதிக பணம் கிடைத்தது மற்றும் தோட்டங்களுக்கு திரும்பிய புலம்பெயர்ந்தோருக்கும் தொழில்வாய்ப்பு காணப்பட்டது. இத்துறையானது கத்தரிப்பு உள்ளடங்கலான அதன் அறுவடைக்கு முன்னரான நடவடிக்கைகளில் எந்திரமயமாக்குவதனை நோக்கியது. ஆனால் தரம் பராமரிக்கப்படுவதனை உறுதிசெய்வதற்காக கையால் பறிக்கும் நடைமுறையினை பராமரித்தது.

இத்துறையானது பயிர் பன்முகப்படுத்தலில் தொடர்ச்சியாக முன்னிறுத்தம் செய்வதுடன் மூன்றாம் பயிராக தென்னையினை நாட்டியுள்ளது. ஓர் குறைந்த பராமரிப்பு செடியாக மரத்தின் ஒவ்வொரு பகுதிக்குமான பயன்பாட்டினைக் கொண்ட அது ஓர் கவர்ச்சி மிக்க முன்மொழிவாகும். ஸ்ட்ராபெரீசுக்கான பசுமை இல்லங்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகியது. நாம் எமது தொழிற்சாலைகள் ஐந்தில் சூரிய மின் அமைப்புமுறைகளை நிறுவி தூய்மையான வலு உருவாக்கத்திற்கு துணைபுரிகின்றோம்.

மெப்ரொக்கும் ஓர் சிறப்பான வருடத்தினை பதிவு செய்தது. ஓர் பசும் தேநீர் கலாச்சாரத்திற்கு மத்தியில் கடந்த மூன்று வருடங்களாக சீனாவுக்கு தேயிலையை ஏற்றுமதி செய்யும் பாரிய ஏற்றுமதியாளராக காணப்பட்டது. கம்பனியானது பலவிதமான கலவைகளை வழங்கும் ஓர் வித்தியாசமான பாதையினை நடைமுறைப்படுத்தியது. அருந்துவதற்கு தயாராயுள்ள தேநீர் உற்பத்தியாளர்களுக்கு சந்தைப்படுத்துவதற்காக நாம் அருந்துவதற்கு தயாராயுள்ள தேயிலையினை விருத்திசெய்தோம். இந்த மாதிரியானது தாய்வானில் வெற்றிகரமாக பயன்படுத்தப்பட்டதுடன் அருந்துவதற்கு தயாராயுள்ள தேயிலைக்கு சில திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன. மெப்ரொக் ஜப்பானுக்கான மூன்றாவது பாரிய தேயிலை ஏற்றுமதியாளர் என்பதுடன் நாட்டின் பாரிய கம்பனிகளில் சிலவற்றுக்கு ஏற்றுமதி செய்கின்றது. உருசி சுயவிவரங்களை புரிந்துகொள்வதனை பயன்படுத்தும் இந்த மூலோபாயமானது வெற்றிக்கான திறவுகோலாகும், கம்பனியின் புரள்வு மற்றும் தேறிய இலாபத்தில் 100% அதிகரிப்பினை இயலுமையாக்கியதுடன் முக்கிய சந்தைகளில் வளர்ச்சிக்கான மேலும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

பெருந்தோட்ட மற்றும் தேயிலைக் கம்பனிகளுக்கான எதிர்காலம் சாத்தியமாகக் காணப்படுகின்றது. இது பயிர் பன்முகப்படுத்தலுக்கான திட்டங்கள் மற்றும் நடைமுறையிலுள்ள மற்றும் புதிய சந்தைகளில் மெப்ரொக்கின் வளர்ச்சிக்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன.

### கைத்தொழில் உள்ளீடுகள், சக்தி மற்றும் வலு

கைத்தொழில் உள்ளீடுகள், சக்தி மற்றும் வலு துறையானது அதன் உற்பத்தித் தேக்கங்களையும் பூகோளவியல் சந்தைகளையும் விரிவாக்கியது. இதன் மூலம் இத்துறையானது வரிக்கு பிந்திய இலாபமாக ரூபா 1.05 பில்லியனை வழங்கியதுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 32% வளர்ச்சியாகும். கைத்தொழில் உள்ளீடுகள் தனிக்கூறு மூலப்பொருட்களில் முன்னிறுத்தம் செய்ததுடன், புதிய உற்பத்திகளை விருத்திசெய்வதற்காக வாடிக்கையாளர்களுடன் பணிபுரிந்தது. புதிய முதன்மையாளர்கள் சேர்க்கப்பட்டு உற்பத்தித் தேக்கமானது விரிவாக்கப்பட்டது. இது சார்க் நாடுகள் மற்றும் இந்தோனேசியா மற்றும் தாய்லாந்து நாடுகளிடையே அதன் பிராந்திய பிரசன்னத்திற்கு துணைபுரிந்தது. லைவ்சயன்ஸ் உம் டினன்ஏ பரிசீலித்தல் இயந்திரங்களது அறிமுகத்துடன் அதன் உற்பத்தி தேக்கத்தினை விரிவுபடுத்தி மாலைதீவிற்கும் சென்றுள்ளது. பவர் அன்ட் எனர்ஜி உம் அதேபோன்ற ஓர் மூலோபாயத்தினை பின்பற்றியது. சிங்கர் வலையமைப்பினூடாக விநியோகிக்கும் சிறிய அளவிலான மின்னாக்கிகளுக்கு நகர்ந்து அவற்றை மாலைதீவுக்கும் ஏற்றுமதி செய்தது. வலு வணிகமானது சூரிய மற்றும் காற்று ஆகியவற்றில் 5 புதுப்பிக்கத்தக்க வலுத் திட்டங்களுக்கு விண்ணப்பித்ததுடன் அதன் தற்போதைய கொள்திறனான 100 மெகா வோட்டிலிருந்து 500 மெகா வோட்டிற்கு அதிகரிப்பதற்கு ஆர்வமாயுள்ளது.

இத்துறைக்கான எதிர்காலத் திட்டங்கள் வெளிநாட்டு சந்தைகளுள் நுழைதல் மற்றும் வருமதிகளின் மேம்படுத்தலுடன் திரவத்தன்மையினை முகாமைப்படுத்தல் என்பவற்றை முன்னிறுத்தியுள்ளன. முதன்மையாளர்களிடமிருந்தான உதவியுடன் நாம் சில உள்ளீடுகளை உற்பத்தி செய்வதனையும் நோக்குகின்றோம்.

### எக்கோ சொலுாசன்ஸ்

எக்கோ சொலுாசன்ஸ் இவ்வருடத்தில் ஓர் திடமான செயற்திறனை வழங்கியது. இது வருவாயில் 42% அதிகரிப்பினையும் வரிக்கு பிந்திய இலாபத்தில் 127% அதிகரிப்புடன் கம்பனியின் வரலாற்றில் முதற் தடவையாக ரூபா 1.50 பில்லியனை எட்டியது. இது குழுமத்தின் பழமை வாய்ந்த துறைகளில் ஒன்றாகும் என்பதுடன் இதன் உற்பத்திகள் உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தைகளில் பயன்படுத்தப்படலாம். இத்துறையானது உள்ளூர் மற்றும் உலகளாவிய சந்தைகளுக்கான உற்பத்தியில் 90% பெறுமதியினை உள்ளூரில் சேர்ப்பதுடன் அந்நிய செலாவணியிலான அழுத்தத்தினை குறைக்கின்றது. மேலும், இந்தியாவில் ஓர் உற்பத்திசெய்தல் வசதியினை வைத்திருப்பதும் மூலப் பொருட்களுக்கான அணுக்கத்திற்கும் பருமனுக்கும் உதவியது. மூலப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளுதல் தொடர்ந்தும் ஒரு சவாலாக காணப்படுவதுடன் இந்த இடர்நேர்கையினை குறைப்பதற்காக பின்னோக்கிய ஒருங்கிணைப்பில் துறையானது முதலீடு செய்துள்ளது.

இத்துறைக்கான எதிர்காலமானது, தென்னை நாரினை ஒருங்கிணைக்கும் அதன் உற்பத்திகள் சுற்றுச்சூழல் பொறியியல் தீர்வுகளில் பரவலாக பயன்படுத்தப்படுவதனால் செழிப்பாக தென்படுகின்றது. எதிர்வரும் வருடங்களில் இது கேள்வியினை இயக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### கட்டுமானப் பொருட்கள்

கட்டுமானப் பொருட்கள் துறையானது புரள்வு மற்றும் தேறிய இலாபத்தில் திடமான வளர்ச்சியாக முறையே 62% மற்றும் 37% இனை வழங்கியதுடன் வரிக்கு பிந்திய இலாபமானது ரூபா 1.15 பில்லியனாக பதிவுசெய்யப்பட்டது. ஏற்றுமதி பருமனிலான வளர்ச்சி ஊக்கமளிப்பதாக காணப்பட்டது. இங்கு பருமன் மற்றும் பெறுமதியானது முறையே 2.8 மடங்காகவும் 3 மடங்காகவும் அதிகரித்தன. பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை உற்பத்தி செய்வதற்காக நாம் ஓர் புதிய தொழிற்சாலைக்கு நகர்ந்தோம். இங்கு அடிப்படை பிதுக்கி வார்த்தலிலிருந்து அகன்று இலகுவான பொறியியல் தீர்வுகளை நாம் மேற்கொண்டோம். மேலும், அலுமெக்ஸ் பில்டிங் சிஸ்டம்ஸ், எமது தனியுரிமையுடைய ஜன்னல் மற்றும் கதவு தீர்வுகள் மற்றும் கட்டட முகப்பு முறைகளை உள்ளூர் மற்றும் உலகளாவிய சந்தைகளில் அறிமுகப்படுத்தியது. இது காற்று, நீர், ஒலிசார் மற்றும் இயக்கநிலை அழுத்தம் ஆகியவற்றிற்கு ஈடுகொடுக்கும் அதன் ஆற்றலுக்கான சான்றளிப்புடன் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த உற்பத்திகள் உயர் மாடிக் கட்டிடங்களில் வெளிநாடுகளிலும் பயன்படுத்தப்படுகின்றது. இது உலகளாவிய நியமங்கள் மற்றும் பரிசோதனைகளை அது பின்பற்றுவதனை உறுதிசெய்கின்றது. இத்துறையானது ஓர் பரந்த அளவிலான பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை உள்ளூர் சந்தைக்கு அறிமுகப்படுத்தியதுடன் அதன் வர்த்தகர் வலையமைப்பினையும் விரிவாக்கியது. இந்த முன்னெடுப்புகள் உயர்ந்த கொள்திறன் பயன்பாட்டினை இயலுமையாக்கியதுடன் கிரய ஏற்புகளையும் மேம்படுத்தின. அலுமெக்ஸ் ஓர் புதிய வணிக நாமமான டுவெலிங்ஸ் இனை

# தலைவர்/பிரதம நிறைவேற்றுநரின் செய்தி

உள்ளூர் வதிவிட சந்தைக்கு அறிமுகப்படுத்தியது. இதன் உற்பத்தி வீச்சானது மரக் கதவுகள் மற்றும் ஜன்னல்களிலும் பார்க்க குறைந்த விலையில் கவர்ச்சிகரமாக விலையிடப்பட்ட கதவுகள் மற்றும் ஜன்னல்களை உள்ளடக்கியது. உள்ளூர் அலுமீனியம் மீள்சுழற்சி மற்றும் மரத்துண்டு உற்பத்தியானது கணிசமானளவு அதிகரித்து இறக்குமதி மாற்றீடு ஊடாக அந்நிய செலாவணியினை சேமிக்கக் கூடிதாயிருந்தது.

இத்துறைக்கான எதிர்காலம் பிரகாசமாயுள்ளது. அலுமெக்ஸ் பில்டிங்ஸ் சிஸ்டம்ஸ் உள்ளூர் மற்றும் உலகளாவிய சந்தைகளில் ஈர்க்கப்படுவதனால் அது வளர்ச்சி மற்றும் ஏற்றுமதிக்கு தயாராயுள்ளது. உற்பத்திகள் கவர்ச்சிகரமாக விலையிடப்பட்டுள்ளதனால் உள்ளூர் சந்தையும் வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை வழங்குகின்றது. இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட கொள்திறன் அதிகரிப்பும் மேல்வரிசை வளர்ச்சிக்கு உதவும் என்பதுடன் உற்பத்திச் செயற்திறன்கள் இலாபகரத்தன்மையினை உயர்த்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஆடைகள்

ஹேலீஸ் ∴பெப்ரிக் பிஎல்சி ஏப்ரல் 2021 இல் சவுத் ஏசியா டெக்ஸ்டைல்ஸ் லிமிட்டட் இன் கையகப்படுத்தலுடன் அடுத்த வளர்ச்சி யுகத்திற்கு ஓர் முன்னோக்கிய பேராற்றல் வாய்ந்த அடி எடுத்து வைத்துள்ளது. இது 2020/21 இல் அதன் நடைமுறையிலுள்ள தொழிற்சாலையில் ஆகக்கூடிய கொள்திறன் பயன்பாட்டினை எட்டுவதற்கு தயாராயுள்ளது. கையகப்படுத்தலானது சரியான நேரத்தில் சரியான நாணயத்தில் நிதியளிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டது. தலைமைத்துவ அணியானது மூலோபாயம், கொள்கைகள் மற்றும் செயல்முறைகளை அதன் நடைமுறையிலுள்ள தொழிற்சாலையில் ஒத்திசைவாக்கி அதன் செயற்பாடுகளை சாதனையான நேரத்தில் மாற்றியமைத்து நாட்டின் பாரிய துணி உற்பத்தியாளராக வந்தது. நிதிச் செயற்திறனானது புதிய கையகப்படுத்தலின் பயனுறுதிமிக்க கொள்திறன் பயன்பாட்டினை பிரதிபலிப்பதுடன் அதன் வருவாயானது 117% ஆல் அதிகரித்து ரூபா 31.67 பில்லியனை அடைந்தது. ஹேலீஸ் ∴பெப்ரிக் அதன் நீண்டகால மூலோபாயத்தில் விலகிச் செல்லாதிருந்ததுடன் புதிய தொழிற்சாலையின் செயற்பாடுகளை மூலோபாய பங்காளிகளுடன் செயற்படுவதற்காக சீரமைத்தது. இது கடந்த மூன்று வருடங்களாக நல்ல விளைவினை வழங்கிய உயர் பெறுமதியிலான செயற்கை துணி உற்பத்தியில் கவனஞ்செலுத்துவதற்காகும். வரிக்கு பிந்திய இலாபமானது 270% ஆல் வளர்ச்சியடைந்து ரூபா 2.69 பில்லியனை எட்டியதுடன் இது குழுமத்தின் இலாபத்தில் 10மூ இனை கணக்கீடு செய்தது.

ஹேலீஸ் ∴பெப்ரிக் அதன் துறையில் ஓர் புத்தாக்கமானதாக காணப்பட்டதுடன், உலகளாவிய நாகரீக வணிக நாமங்களுக்கு அதன் சொந்த துணிகளது தேக்கங்களை விருத்திசெய்யும் இலங்கையின் முதலாவது கம்பனியாகக் காணப்பட்டது. இது மூலோபாய வாடிக்கையாளர்களுடன் பணியாற்றியதுடன் அவர்களது தேவைப்பாடுகள் அதன் ஆய்வு மற்றும் அபிவிருத்திக்குட்பட்டன. ஒவ்வொரு வருடமும் இரண்டு தொகுப்புகளை அறிமுகப்படுத்துவதுடன் கம்பனியானது விளையாட்டு உடைகளை ஓய்வுநேரத்தில் அணியும் போக்கினைக் கொண்ட தொழில்துறைக்கு முக்கியமாக வழங்குகின்றது. இவை அடுக்கு 1 கொள்வனவாளர்களிடையே ஆர்வத்தினை தூண்டியுள்ளதுடன் இவர்களுடன் இத்துறையானது திடமான பங்குடைமையினையும் நிறைவான கொள்வனவுக் கட்டளைகளையும் விருத்தி செய்துள்ளது.

ESG இலான ஓர் திடமான முன்னிறுத்தமானது கம்பனி புத்தாக்கமான இயற்கை சாயங்கள் பயன்படுத்துவதனையும் இரசாயனங்களது பாவனையினை குறைப்பதையும் விளைவித்தது. பல்லுயிர்பெருக்கம் மற்றும் மீளுருவாக்கம் என்பன சூழலுக்கான அதன் கடப்பாட்டின் ஓர் பகுதியாகக் காணப்படுவதுடன் முறைமைப்படுத்தல் இணக்கப்பாட்டிற்கு அப்பால் சென்று அதன் சுற்றுச்சூழல் அடித்தடத்தினை குறைப்பதற்கும் முயற்சிக்கின்றது. பணியாட்கள் மற்றும் சமூகத்திற்கான அதன் கடப்பாடானது, அதன் 85% தொழிற்சேனையானது 15 கிலோ மீற்றர் சுற்றுவட்டத்தில் பணிக்கமர்த்தப்பட்டிருப்பதுடன் திடமாக காணப்படுகின்றது. தரம், சூழல் மற்றும் சமூக இணக்கப்பாட்டு சான்றளிப்புகள் அதன் கடப்பாட்டினை உறுதிப்படுத்துவதுடன் இந்த புத்தாக்கமான துறையின் வளர்ச்சி ஆர்வத்திற்கு ஓர் திடமான மேடையினை வழங்குகின்றது.

## உல்லாசத்துறை

உல்லாசத்துறையின் மீட்பானது நவம்பர் 2021 முதல் மார்ச் 2022 வரை உத்வேகத்தினை அடைந்தது, இது 70% ஆன நாடுகள் தடுப்பூசி பெற்றுக்கொண்ட உல்லாசப் பயணிகளுக்கு அவற்றின் எல்லைகளை திறந்ததினாலாகும். இத்துறையானது விரைவாக மீட்கத்தக்கதாக இருந்ததுடன், மீட்பின் இடைவிட்ட தன்மையானது துறையில் தொடர்ந்தும் ஓர் பின்னிழுவையாகக் காணப்படுவதுடன் இதனை நிலைப்படுத்துவதற்கு ஓர் நிலைபேறுள்ள வளர்ச்சி உத்வேகம் அவசியமாகக் காணப்படுகின்றது. மாலைதீவிலுள்ள உல்லாசப் போக்கிடமான அமாயா குடா ரா மாற்றமடைந்து இலாபம் ஈட்டுவதுடன் வெளியிடங்களிலுள்ள உல்லாசப் போக்கிடங்களும் சமநிலையடைவதற்கு இயலுமையாயிருந்தன. கிங்ஸ்பரி மற்றும் அமாயா பீச் ஆகியன இன்னமும் நட்டத்தில், இவை குறைக்கப்பட்டாலும், இயங்குகின்றன. இத்துறையானது அதன் துடிப்பினை மீளப்பெறுவதற்கும் அந்நிய செலாவணி உட்பாய்ச்சல்களுக்கு மற்றும் நாட்டின் முன்னேற்றத்திற்கு சாத்தியமாக பங்களிப்பதற்கும் ஓர் திடமான மற்றும் நிலைபேறுள்ள மீட்பு அவசியமாகின்றது. இத்துறையானது ஓர் நல்ல வருடத்தினை அனுபவித்து மூன்று வருடங்கள் ஆகின்றன. பொருளாதார மற்றும் அரசியல் உறுதிப்பாடானது இத்துறையின் மறுமலர்ச்சிக்கு முக்கியமாவதுடன் எதிர்வரும் வருடத்தில் ஓர் வெற்றிகரமான பருவகாலத்தினை எதிர்பார்த்துள்ளோம்.

## ஏனையவைகள்

இத்துறையானது உடைமை நிறுவனத்தினது செயற்பாடுகள், பிபிஓ செயற்பாடுகள் மற்றும் ∴பென்டன்ஸ் லிமிட்டட் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. ∴பென்டன்ஸ் இன் நடவடிக்கைகளது விரிவாக்கம் மற்றும் ஹேலீஸ் பிஎல்சி இனால் பெறப்பட்ட பங்கிலாபங்கள் என்பன வரிக்கு பிந்திய இலாபம் 165% ஆல் அதிகரித்து ரூபா 4.49 பில்லியனை அடைந்து குழுமத்தின் மொத்தத்திற்கு 16% பங்களிப்பினை வழங்கியது. 103 வருடங்கள் பழமை வாய்ந்த இந்த மின் பொறிமுறை கம்பனியின் இவ்வருடத்திலான வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாகும் என்பதுடன் அது பின்வருபவை உள்ளடங்கலான அதன் அனைத்து வணிகங்களது செயற்பாடுகளை விரிவாக்கியது. காற்றுப் பதனிகள், குழாய்பணிகள், தீ பாதுகாப்பு, மின் வேலை, வசதிகள் முகாமைத்துவம் மற்றும் சூரியமின் என்பவையாகும். வருடத்தில் காணப்பட்ட மின்தடைகள் சூரியமின் வலுவுக்கான ஆர்வத்தினை தூண்டியதுடன் இது தற்போது அதன் பாரிய வணிக செங்குத்தாகும். இத்துறையானது பாரிய திட்டங்களை வழங்குவதற்கு வசதியளிப்பதற்காக முதன்மையாளர்களை சேர்த்துக்கொண்டுள்ளது. ∴பன்டன்ஸ் அதன் ததொதொ வணிகத்தினை 100% க்கும் அதிகமான வளர்த்து இத்துறையில் காணப்படும் 3 முதன்மைக் கம்பனிகளில் ஒன்றாக உள்ளது.

உடைமைக் கம்பனியினால் பெறப்பட்ட பங்கிலாபங்கள் ரூபா 5.15 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இது ஒருங்கிணைக்கப்படும்போது ஈடுசெய்யப்படுவதுடன் இத்துறையின் விளைவில் பிரதிபலிக்கப்படவில்லை.

இத்துறைக்கான எதிர்காலம் ஓர் திடமான கொள்வனவு கட்டளைகளுடன் கவர்ச்சிகரமாக காணப்படுகின்றது. கட்டுமானத்துறை மற்றும் அந்நிய செலாவணி திரவத்தன்மை ஆகியவற்றில் காணப்பட்ட மந்தநிலை மற்றும் உயர் வட்டி வீதங்கள் என்பன செயற்பாடுகளை கடினமாக்கியது.

## மக்கள் சக்தி

ஹேலீஸ் உலகில் ஒவ்வொரு சக்கர விளிம்புப் பல்லும் தடையின்றி சுழல்வதற்கு மக்களே காரணமாயிருப்பதுடன் எமது மூலோபாய இலக்குகள் அடைவதனை உறுதிப்படுத்துகின்றது. இதன் காரணமாகவே தொற்றின்போது அவர்களது வேதனமானது பாதிக்கப்படாதிருப்பதனை உறுதிசெய்ததுடன் நடைமுறையிலுள்ள நெருக்கடியினால் மோசமாக பாதிக்கப்பட்டவர்களுக்காக நாம் நிவாரணங்களை வழங்குவதற்கான ஓர் வழியினையும் கண்டோம். முன்னைய ஆண்டிலும் இந்த வருடத்திலும் காணப்பட்ட செயற்திறன்கள் எமது தீர்மானங்கள் நியாயப்படுத்தப்படுவதனை ஆமோதித்தது. எமது நிறுவனம் முழுவதும் காணப்படும் தகுதியாண்மை கலாச்சாரமானது உள்முயற்சிகளுக்கான ஓர் செழிப்பான நிலமாக செயற்படுகின்றன. அத்துடன் உட்கட்டமைப்பு, செயல்முறைகள் மற்றும் குழுமத்தினுள்ளான மௌனமான அறிவு என்பவற்றை பயன்படுத்தி புதிய சிந்தனைகளை வளர்த்து அவற்றை செயலாற்றக்கூடியதாயுள்ளது.

**சமத்துவமான வாய்ப்பு, பன்முகத்தன்மை மற்றும் சேர்த்துக்கொள்ளல் என்பன ஹேலீஸின் கொள்கை வரம்புறுகையினுள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதுடன் நாம் ஆழமாக தோண்டும்போது அதன் பரிமாணங்களில் எமது விழிப்புணர்வானது வெளித்தோன்றுகின்றது. பாலின சமத்துவமின்மை எமக்கு ஓர் முக்கியமான முன்னிறுத்தம் என்பதுடன் நாம் பெண்களுக்கு புதிய வாய்ப்புக்களை உருவாக்குவதில் முன்னிறுத்தமாயுள்ளோம்.**

சமத்துவமான வாய்ப்பு, பன்முகத்தன்மை மற்றும் சேர்த்துக்கொள்ளல் என்பன ஹேலீஸின் கொள்கை வரம்புறுகையினுள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதுடன் நாம் ஆழமாக தோண்டும்போது அதன் பரிமாணங்களில் எமது விழிப்புணர்வானது வெளித்தோன்றுகின்றது. பாலின சமத்துவமின்மை எமக்கு ஓர் முக்கியமான முன்னிறுத்தம் என்பதுடன் நாம் பெண்களுக்கு புதிய வாய்ப்புக்களை உருவாக்குவதில் முன்னிறுத்தமாயுள்ளோம். ஹேலீஸ் ஃபெப்ரிக் பிஎல்சி அனைத்தும் பெண்கடளடங்கிய ஓர் பின்னல் தொழிற்சாலையினை ஆரம்பித்து அது வெற்றிகரமாக இயங்குகின்றது. அதேபோன்று, அட்வான்டிஸ் பெண்களை கவைபோல் பளுவேற்றிகளை இயக்குவதற்கு பயிற்சியளித்துள்ளதுடன் இது பெண்களுக்கு அவர்களது ஆற்றல்கள் மற்றும் திறமைகளை நிரூபிப்பதற்கான ஓர் வழியினை வகுத்துள்ளது. பெருந்தோட்டத்துறையும் கங்காணிகள் பதவியினுள் உள்வருவதுற்கு பெண்களை ஊக்குவித்துள்ளது. இங்குதான் தொழிற்சேனையில் பெண்களது பங்குபற்றலை அதிகரிப்பதற்கான ஓர் இடமாகும். எவ்வாறாயினும், ஏணியில் காணப்படும் உடைந்த படிகளை திருத்துவதற்கு ஆர்வமாயுள்ளதுடன் எமது சமத்துவ வாய்ப்பு கொள்கைகளுக்கமைவாக தலைமைத்துவத்தில் பெண்களது பங்கினை அதிகரிப்பதற்கு நாம் கடப்பாட்டுடன் உள்ளோம். இது பிரதான சபை மற்றும் துணைக்கம்பனிகளது சபைகளில் பெண்களது நியமனத்தினூடாக தெளிவாக புலப்படுகின்றது. கூடுதலாக செய்யவேண்டிய பல விடயங்கள் உள்ளதுடன் நாம் ஓர் ஆரம்பத்தினை மேற்கொண்டுள்ளதுடன் இந்த திடமான அடித்தளங்களில் தொடர்ந்தும் கட்டியெழுப்புவதற்கு உறுதியாயுள்ளோம்.

### எதிர்காலத் தோற்றம்

உலகளாவிய எதிர்கால வளர்ச்சியானது 2021 இல் மதிப்பிடப்பட்ட 6.1% உடன் ஒப்பிடும்போது 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்கு 3.6% ஆக எதிர்வுகூறப்பட்டுள்ளது. உணவு மற்றும் எரிபொருள்களின் விலைகள் உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுவதுடன் இதன் நிமித்தம் பணவீக்கத்தின் தவிர்க்கமுடியாத உயர் அழுத்தம் காணப்படும். இது குறைந்த வருமானம் ஈட்டும் நாடுகளை பாதிப்பதுடன், இதன் தாக்கங்களை குறைப்பதற்கு அதிகளவு மற்றும் பலதரப்பு முயற்சிகள் தேவைப்படுகின்றன. உலக வர்த்தகத்திலான வளர்ச்சி 2022 இல் 5% ஆக காணப்படும் என எதிர்பார்க்கப்படுவதுடன் இது 2021 இன் 10% மதிப்பிடப்பட்ட வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது வாய்ப்பு வளங்கள் மந்தமாகக் காணப்படுகின்றன.

நாட்டிற்கான எதிர்கால கண்ணோட்டம், ச.நா.நி. மற்றும் ஏனைய கொடை வழங்கும் நாடுகளுடனான ஒப்பந்தப்பேச்சுக்களது நிலுவையுடன், தற்போது மிகவும் நிலையுறுதியற்று காணப்படுகின்றது. அதன் பாரிய பொருளாதார சவால்களான உயர்ந்த கடன், குறைவான அந்நிய செலாவணி ஒதுக்கங்கள் மற்றும் உயர்ந்த பணவீக்கம் என்பன வளர்ச்சிக்கு சுமையாக இருப்பதுடன் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் எமது வளர்ச்சியானது 2.4% ஆக எதிர்வுகூறப்பட்டுள்ளது. உணவு, எரிபொருள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு மற்றும் வழங்கல் பற்றாக்குறைகள் மற்றும் இறுக்கமான அந்நிய செலாவணி திரவத்தன்மை என்பன 2022 இல் பணவீக்கத்தினை மேலும் உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும், 2023 இல் குறைவடையும் உலகளாவிய விலைகள் மற்றும் வழங்கல்களின் உறுதிப்பாடு என்பன பணவீக்கத்திலான அழுத்தத்தினை குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பாரியபொருளாதார உறுதிப்பாட்டினை மீட்டெடுப்பதற்கு மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான நிலைமையினை உருவாக்குவதற்காக உடனடி வழிமுறைகள் அவசியமாகும். ஓர் தெளிவான முன்னோக்கிய பாதை காணப்படும்வரை எதிர்வரும் மூன்று மாதங்கள் கடினமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும், நிதியாண்டின் இரண்டாவது பாதியானது மிகவும் அவசியமான கட்டமைப்பு மறுசீரமைப்புகளது ஆரம்பத்துடன் ஒரே சமயத்தில் தீர்வுகள் வெளியேற்றப்படும் என நாம் நம்பிக்கையுடன் உள்ளோம்.

ஒவ்வொரு வணிகத்துறையினுள்ளும் ஹேலீஸின் சொந்த திட்டங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் இவை ஏற்றுமதி வளர்ச்சியினை ஊக்கப்படுத்தும் நாட்டின் தேவைகளுடன் பெரும்பாலும் பொருந்தியுள்ளது. எமது திடமான ஆளுகை பொறிமுறைகள் முன்னோக்கிய சவால்களை எதிர்கொள்வதற்கான திறவுகோலாகும் என்பதுடன் கடந்த மூன்று வருடங்களிலான அழுத்தங்களின் பின்னர் எமது கூட்டு புத்திசாலித்தனம் கூர்மையாக்கப்பட்டுள்ளது. திடமான தொடர்பாடல் வரிசைகள் மற்றும் பயிற்சியளிக்கப்பட்ட அணிகள், நாம் ஹேலீஸ் உலகின் புதிய எல்லைகளை நிர்ணயிப்பதற்கு புறப்படும் சமயம் எமது விருப்பங்களுக்கு துணையளிக்கும்.

### பங்குதாரர்களுக்கான பெறுமதி

ஹேலீஸ் பிஎல்சி இனது பங்கொன்றின் விலையானது ரூபா 60.80 இலிருந்து ரூபா 76.90 ஆக உயர்வடைந்ததுடன் இது பங்குதாரர்களுக்கு மூலதன மதிப்பேற்றத்திலிருந்து 26% விளைவினை வழங்கியுள்ளது.


பங்கொன்றிற்கான உழைப்பு ரூபா 10.18 இலிருந்து ரூபா 24.34 ஆக 125% அதிகரிப்புடன் பங்குதாரர்களது பெறுமதியானது கணிசமானளவு உயர்வடைந்தது. மார்ச் 2022 இல் நாம் பங்கொன்றிற்கு ரூபா 4.00 வீதம் ஓர் இடைக்கால பங்கிலாபத்தினை வழங்கினோம்.

ஹெலீஸ் பிஎல்சி இனது வழங்குநர் தரப்படுத்தலானது இவ்வருடத்தில் இருமுறை தரமுயர்த்தப்பட்டதுடன் தற்போது இது AA- ஆக திடமான எதிர்காலத்துடன் குழுமத்தின் செயற்திறன் மற்றும் மீளெழுச்சியினை பிரதிபலிக்கின்றது.

### பாராட்டுக்கள்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிவிலக்கான செயற்திறனானது எமது பல்வேறு துறைகளது அணிகளின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு என்பவற்றின் விளைவினாலாகும் என்பதுடன் இவர்கள் அனைவரும் எமது பங்காளிகளது பெறுமதி உருவாக்கத்திற்கு பங்களித்துள்ளார்கள். நாட்டில் ஹேலீஸ் நிறுவனத்தினை மிகவும் விரும்பத்தக்க கம்பனியாக மாற்றியமைக்காகவும் விழுமியங்களுடன் வாழ்ந்தமைக்காகவும் அனைவருக்கும் நன்றி சொல்வதில் சபையானது என்னுடன் இணைகின்றது. நான் இந்த சந்தர்ப்பத்தில் ஓர் புதிய மட்டத்தில் செயற்படுவதற்காக முன்னிருந்து அணிகளை ஊக்குவித்து மற்றும் பயிற்றுவித்தமைக்கான குழும முகாமைத்துவக் குழு மற்றும் துறைசார் தலைமைகளுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வருடத்தில் தலைசிறந்த செயற்பாட்டிற்கு பங்களித்த கூட்டு தலைவருக்கு அவரது உடனடி ஆலோசனை மற்றும் தொலைநோக்கிற்கு நான் நன்றி கூறுகின்றேன். ஓர் கடினமான ஆண்டினை வழிசெலுத்துவதனை இயலுமையாக்கிய எனது சக சபை அங்கத்தவர்களுக்கு அவர்களது விழிப்பு மற்றும் நுண்ணறிவுக்கு நன்றி கூறுகின்றேன். இந்த காவியப் பயணத்தில் பங்குபற்றிய ஏனைய பங்காளிகள் மற்றும் எமது பங்குதாரர்களின் நம்பகத்தன்மை மற்றும் நம்பிக்கையினை நான் பாராட்டுகின்றேன்.



மொஹான் பண்டித்தகே
தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்றுநர்
19 மே 2022